பக்கங்கள் : 12+IV= பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 15 புதன்கிழமை (29~01~2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:64

## உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு

# இந்திய நிபுணரின் நிபந்தனைகளை புலிகள் அடியோடு நிராகரித்தனர்

## மனிதாபிமானப் பிரச்சினையுடன் ஆயுதக்களைவை தொடர்புபடுத்துவதற்கு பாலசிங்கம் கடும் ஆட்சேபம்





லண்டன்,ஜனவரி29

**குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயங்களை மாற்றி அமைத்து மக்களை அங்கு குடியமர்த்துவதாயின் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் களையப் படவேண்டும் என்று இந்திய இராணுவ நிபுணர் தெரிவித்திருக்கும் யோச னையை விடுதலைப் புலிகள் இயக்கம் அடியோடு நிராகரித்துவிட்டது.**

**மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையோடு ஆயுதக் களைவை சம்பந்தப் படுத்துவது அபத்தமானது ஏற்கமுடியாதது என்று அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அடித்துக் கூறியிருக்கிறார்.**

லண்டனில் வெளியாகும் 'தமிழ் கார்டியன்' ஆங்கில வார இதழுக்கு அளித்த ஒரு விசேட பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் புலிகளின் கடும ஆட்சேபத்தை வெளியிட்டிருக்கிறார்.

உயர்பாதுகாப்பு வலயங்களை மறுசீரமைப்பு செய்யும் விடயம் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கு மாறு ஸ்ரீலங்கா அரசாங்கம் ஓய்வு பெற்ற இந்திய இராணுவ நிபுணரான லெப்.ஜெனரல் நம்பியாரைக் கேட்டுக கொண்டது.

இது குறித்து ஜெனரல் நம்பியார் சென்ற மாதம் தனது பூர்வாங்க அறிக் கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித் தார். மிகவும் இரகசியமாக வைக்கப பட்டிருந்த இப்பூர்வாங்க அறிக்கை

(2ஆம் பக்கம் பார்க்க)

### பொது நூலகத்தை ஆனந்தசங்கரியே திறப்பார்

யாழ்ப்பாணம்,ஜன.29

புனரமைக்கப்பட்டிருக்கும் யாழ். பொது நூலகம் எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதி திறந்து வைக்கப்பட வுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின தலைவரும் நாடாளுமன்ற உறுப்பி னருமான வீ.ஆனந்தசங்கரி நூலகத்தை திறந்து வைப்பார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (விரமான செய்தி 5ஆம் பக்கத்தில்) (ஐ)

## வெளிச் சக்திகளுக்கு இடமளியாது ஒன்றிணைந்து செயற்படுவோம்!

### புலிகளின் அரசியல்துறை அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.29

'எம் இனத்தை பிரித்தாளும் சக்தி களுக்கு இடம்கொடுக்காமல் ஒன்றி ணைந்து செயற்படுவோம்.'- என்று தலைப்பிட்டு விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறை அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் விடுக்கப்பட்ட அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

பகிடிவதைகள் தொடர்பாக செய் திகள் வெளியாகிவரும் இவ்வேளை யில் 16.01.2003 அன்று உதயன் பத்திரிகையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் சமூகம் தொடர்பாக வெளி வந்த வாசகர் கடிதத்தை தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்களுக்கும் குறித்த பத்திரிகைக்கும் இடையே முரண்பாடுகளும் இடைவெளிகளும் ஏற்பட்டுவருகின்றன. இவ்விடயங்கள் தொடர்பாக நாம் சிலவற்றை தெளிவு படுத்த விரும்புகிறோம்.

மேற்படி வாசகர் கடிதத்தில் குறிப் பிட்டது போன்று யாழ்.மாவட்ட அரசி யல்துறைக்கு குறிப்பிட்ட கடிதத்தின் பிரதி இதுவரை கிடைக்கப்பெற வில்லை. ஆயினும், சமூக பொறுப் புள்ளவர்கள் கவனத்தில் எடுக்க வேண் டும் என்ற பத்திரிகையின் நோக்கத் திற்கு அமைவாக நாம் இது தொடர் பாக ஆராய்ந்து அறிந்த வகையில் இச்சம்பவம் நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

பல்கலைக்கழகத்தில் மாணவர் கள் பகிடிவதை புரிவதை எந்தவொரு சமூக நலன்விரும்பியும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்த வகையில் பல்க லைக்கழக மாணவர் ஒன்றியமும் நிர்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வளைகுடாவில் யுத்த மேகம்!

ஐ.நா.தீர்மானத்துக்கு ஈராக் முழு மையாக ஒத்துழைக்கவில்லை என்று ஆயுத பரிசோதகர்கள் குழு அதன் அறிக்கையில் தெரிவித்திருப்பதை அடுத்து வளைகுடாவில் யுத்த மேகம திரளத் தொடங்கியிருக்கிறது.

இது பற்றிய விரிவான செய்திகள 'உலக அரங்கில்' 3ஆம் பக்கத்தில். (ஐ)

### 100 பிக்குமார் வருகை

யாழ்ப்பாணம்,ஜன.29

நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு தென்னிலங்கையிலி ருந்து பௌத்த பிக்குமார் 100 பேர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

ஏ - 9 பாதையூடாக நேற்று மாலை முகமாலைக்கு வந்து சேர்ந்த இவர் கள் பாதை மூடப்பட்டதால் அங்கு தங்கியிருந்தனர். இன்று காலை இவர் கள் யாழ்ப்பாணம் வந்துசேர்வர்.(ஐ-3)





கொக்கட்டிச்சோலையில் 1987, 1997 ஆம் ஆண்டுகளில் படுகொலை செய்யப்பட்ட 142 பொதுமக்களின் நினைவாக அமைக்கப்பட்டிருக்கும் தூபியை முதல் படத்திலும் மாவடி முன்மாரிக்கோட்ட இராணுவப் பொறுப் பாளர் நாகேஸ் அதனை திறந்து வைப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

### பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு தீர்வின்றேல்

## பேச்சின் அடுத்த கட்ட நகர்வு சுலபமானதாக இருக்காது!

### தமிழ்ச்செல்வன் கருத்து

கிளிநொச்சி,ஜன.29

குடாநாட்டில் உள்ள உயர் பாது காப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியமருவதில் தோன்றியிருக்கும் சிக் கலுக்கு சுமுகமான தீர்வுகாணப்படா விட்டால் சமாதானப் பேச்சுக்களின் அடுத்த கட்ட நகர்வு கடினமானதா கவே இருக்கும்.

- அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு கூறியி ருக்கின்றார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலி களின் நடுவப்பணிமனையகத்தில் நேற்று தம்மைச் சந்தித்த யுத்தநிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் தலைவர் ஜென ரல் ரொனட் புருகோவ்டேயிடமே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம பமான இந்தச் சந்திப்பு முற்பகல் 11 மணிவரை இடம்பெற்றது.

தமிழ்ச்செல்வனுடன் புலிகளின் சமாதானச் செயலணிப் பணிப்பாளர் புலித்தேவன், மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி மற்றும் ஜோர்ஜ் ஆகி யோர் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

இச்சந்திப்பின் போது புருகோவ்டே தெரிவித்ததாவது:-

யுத்தநிறுத்த நடைமுறைகளை நிறைவேற்ற விடுதலைப் புலிகள் முழு மையான ஒத்துழைப்பை வழங்கி வரு கின்றனர். அத்துடன் யுத்த நிறுத்தத் தில் முழு நம்பிக்கையும் கொண்டுள் ளனர்.

எனது பணி கடினமானது; இறுக்க மானது. இந்தப் பணியை செய்வனே செய்துள்ளேன்.

உயர் பாதுகாப்பு வலய விவகாரத தில் இராணுவச் சமநிலை பேணப்பட வேண்டும். தற்போதைய நெருக்கடிக ளுக்கு படிப்படியாகவே தீர்வு ஏற்பட



வேண்டும் - என்றார்.

தமிழ்ச்செல்வன் கருத்து வெளி யிடுகையில்:-

மக்கள் மீளக்குடியமர வசதியாக உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை களுக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். கட்டம் கட்டமாகவே பேச் சுக்கள் இடம்பெறுகின்றன. இந்த விவ காரத்துக்கு தீர்வு எட்டப்படாவிட்டால பேச்சுக்களின் அடுத்த கட்ட நகர்வு சிக்கலாகவே இருக்கும் - என்றார்.

### பிரதமர் நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிப்பார்

கொழும்பு,ஜன.29

சமாதானப் பேச்சுக்கள், அரசின் தற் போதைய நிலைப்பாடு போன்றவற்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுக கூட்டங்களினூடாக நாட்டு மக்களுக்கு விளக்கிக் கூறவுள்ளார்.

இதன் ஆரம்ப கட்டமாக முதலா வது பொதுக்கூட்டம் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இளைஞர் மத்தியல் திருப்தியை ஏற்படுத்தும் நோக்குடன் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுத் துச் செல்லப்படவுள்ளன. (ஐ)

### மீனவர்கள் தாக்கப்பட்டனர்!

கிளிநொச்சி,ஜன.29

கொக்கிளாய் கடலில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இரு மீன வர்களை படகுகளில் வந்த வேறு மீனவர்கள் சிலர் தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அலம்பிலைச் சேர்ந்த அடைக்கலம (வயது 30), கனகலிங்கம் (வயது 36) ஆகியோர் மீன்பிடித்துக்கொண்டிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மட்டக்களப்பில் புலிகளின் வரவேற்புப் பலகை பட்டபாடு!

### பொலீஸார் பிடுங்கிச் செல்ல கிழக்குப் பல்கலை மாணவர் அதே இடத்தில் மீண்டும் நட்டனர்

செங்கலடி,ஜன.29

மட்டக்களப்பு, பிள்ளையாரடிப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்து நேற்றுமுன்தினம் இரவு பொலீஸாரால் அகற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் வரவேற்புப் பலகை நேற்று மீண்டும் அதே இடத்தில் அமைக்கப்பட்டது. இந்த வரவேற்புப் பலகை அகற்றப்பட்டதை ஆட்சேபித்து நேற்றுக காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களே அப்பலகையைக் கொண்டு வந்து மீண்டும் நிறுவினர்.

விடுதலைப் புலிகளின் வரவேற்புப் பலகை அகற்றப்பட்டதை ஆட்சேபித்து நேற்றுக் காலை நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் 700 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர். ஆர்ப்பாட்டம் காலை 8.30 மணிமுதல் பி.ப 1.00 மணிவரை நடைபெற்றது.

வரவேற்புப் பலகை அகற்றப்பட்டதற்கு அரசுக்கும் பொலீஸாருக்கும் கண்டனம் தெரிவிப்பதாக சுலோக அட்டைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் இறுதியில் மட்டக்களப்பு விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்துக்குச் சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த வரவேற்புப் பலகையை பலவந்தமாக எடுத்து வந்து மீண்டும் நிறுவினர்.

பிள்ளையாரடிப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்புப் பலகை நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் பொலீஸாரால் அகற்றப்பட்டது. பின்னர் அபிவிருத்திக் குழுவினரிடம் பெயர்ப்பலகை ஒப்படைக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கவனத்துக்கு இப்பெயர்ப்பலகை விடயம் கொண்டுவரப்பட்டது. அதையடுத்து போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் வகையில் அரசு கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் புலிகளின் பெயர்ப்பலகையை 48 மணி நேரத்தில் அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் மொறகொட தன்னுடன் வந்திருந்த பாதுகாப்பு அமைச்சின செயலாளரைப் பணித்திருந்தார். 48 மணிநேரத்தில் பெயர்ப் பலகை அகற்றப்படாவிடின் பொலீஸாரைக் கொண்டு அதை அகற்றுமாறும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அதன்படி, நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் பொலீஸார் அந்த வரவேற்புப் பலகையை அகற்றிச் சென்றனர். அவ்வாறு கொண்டு செல்லப்பட்டபோது வழியில் தடைகளை ஏற்படுத்தி புலிகளும், பொதுமக்களும் பொலீஸாரைத் தடுத்தனர்.

இப்பிரச்சினையில் தலையிட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இரண்டு தரப்பினரையும் சமாதானப்படுத்தி வரவேற்புப் பலகையை அபிவிருத்திக் குழுவினரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டனர். பின்னர் அப்பலகையை பொலீஸார் அபிவிருத்திக் குழுவிடம் ஒப்படைத்தனர். ஆயினும் பொதுமக்களின் வற்புறுத்தலின் பேரில் அப்பலகையைப் புலிகள் பொறுப்பேற்றனர்

புலிகளின் அரசியல் அலுவலகத்திலிருந்த வரவேற்புப் பலகையையே கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று எடுத்து வந்து அதே பழைய இடத்தில் மீண்டும் நிறுவினர்.

(ஐ)

# கல்முனை தனியார் வங்கி பணமில்லையென கைவிரிப்பு!

### வைப்பாளர்கள் முற்றுகை; பொலீஸார் விசாரணை

சாய்ந்தமருது,ஜன.29

கல்முனையில் இயங்கிவந்த தனியார் வங்கி ஒன்றில் வைப்புச் செய்யப்பட்ட பணத்தை மீளப்பெறச் சென்ற மக்களுக்கு அங்கு பணம் எதுவுமில்லை என்று தெரியவந்தது. இதனையடுத்து முற்றுகையிட்ட மக்கள் பொலீஸாரின் உதவியையும் நாடினர்.

பணத்தை வைப்புச் செய்தவர்களின் முறைப்பாட்டை அடுத்து பொலீஸார் அந்த இடத்திற்கு விரைந்து சென்று வங்கியின் உதவிமுகாமையாளர், கிளை முகாமையாளர் உட்பட அனைத்து ஊழியர்களையும் பொலீஸ் நிலையத்திற்கு விசாரணைக்கென அழைத்துச் சென்றனர். இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கொழும்பில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் இவ்வங்கியின் கல்முனைக் கிளையில் பல லட்சம் ரூபாவை மக்கள் வைப்பிலிட்டிருந்தனர். வைப்பிலிடப்பட்ட பணம் அனைத்தும் கொழும்பு தலைமையகத்தால் பெறப்பட்டதாகவும் பின்னர் இவ்வங்கியை மூடிவிட நினைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

நேற்று இவ்வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ஒருவர் கொழும்பிலிருந்து கல்முனை கிளைக்கு வருகைதந்து வங்கியை மூடுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டார் எனவும் கூறப்படுகிறது. இத் தகவலை அறிந்த பண வைப்பாளர்கள் வங்கிக்கு சென்று விசாரித்த போது உண்மை தெரியவந்தது. இதனால், ஆத்திரமுற்ற பண வைப்பாளர்கள் அதிகாரிகளை உள்ளே வைத்து வங்கியை இழுத்து மூடியதுடன் பொலீஸாரின் உதவியையும் நாடினர். பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## அதிபர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.29

தென்னிலங்கைக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு சுமார் 800 மாணவர்கள் எதிர்வரும் முதலாம் திகதி புறப்படுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 27 பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களே தெற்கே செல்கின்றனர்.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கு இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அதிபர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு வலயப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஐ-3)

# மக்கள் எழுச்சிப்பேரணியும் முஸ்லிம் தேசப் பிரகடனமும்

### இன்று ஒலுவில் தென்பல்கலைக்கழக முன்றிலில்

பல்கலைக்கழக முஸ்லிம் தேசப் பிரகடனத்துடன் கூடிய மக்கள் எழுச்சிப் பேரணி நிகழ்வு ஒன்றை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகம் இன்று புதன்கிழமை காலை நடத்தவிருக்கின்றது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில்வளாக முன்றிலில் குறித்த பல்கலைக்கழக முஸ்லிம் தேசப் பிரகடனம செய்யப்பட விருப்பதுடன் எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்வோரின் ஒன்றுகூடலும் இடம் பெறவிருக்கின்றது. இனப்பிரச்சினை தீர்வுக்கான சமாதானப் பேச்சில் முஸ்லிம் சமூகத்தின் குறிப்பாக வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள், உரிமைகள் வென்றெடுக்கப்படுவதற்கு அரசுக்கும் பேச்சில் பங்குபற்றும் ஏனைய தரப்புகளுக்கும் அழுத்தம் கொடுக்கும் முகமாகவும் முஸ்லிம் மக்களின் ஒருமித்த குரலை வெளிக்கொண்டு வரும் நோக்குடனும் இந்த நிகழ்வைப் பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்துள்ளது. (ஐ)

## குருபூசை விழா

யாழ்ப்பாணம்,ஜன.29

ஈழத்து சித்தர் பரம்பரையில் தோன்றிய நயினைதீவுச் சுவாமியார் என்றழைக்கப்படும் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகளின் சமாதி தினக் குருபூசை விழா நாளை வியாழக்கிழமை நயினாதீவில் நடைபெறவுள்ளது. (ஐ)

# திரைக்கதை உருவாக்கல் பயிற்சி: 15 பேரின் திரைக் கதைகள் தெரிவு

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு 'ஸ்கிறிப்நெற்' நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள இரண்டாவது சுற்று திரைக் கதை உருவாக்கல் பயிற்சி முகாமிற்கு 15 திரைக்கதைகள் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றன.

தெரிவுசெய்யப்பட்ட திரைக்கதைகளின் விவரம் வருமாறு:-

★ நேற்றிருந்த சுவடு - (ச.சாரங்கா -சாவகச்சேரி)
★ போரும் மனிதனும்- (ந.கேசவராஜன் -முள்ளியவளை)
★ மீண்ட நிலம் - (என்.தவா - யாழ்ப்பாணம்)
★ மூக்குப்பேணி - (ச.இராகவன் - கரவெட்டி)
★ முறிந்த விழுதுகள்- (தி.பாஸ்கரன் - பருத்தித்துறை)
★ குற்றம் புரியாமலே - (செ.ஜமுனாராணி -அச்சுவேலி)
★ மானுட பேதம் - (த.பிரபா - யாழ்ப்பாணம்)
★ அன்புள்ள அம்மாவுக்கு - (ச.பிரேமினி -சாவகச்சேரி)
★ கந்தசாமியின் தயக்கம் - (அ.ஜேசுராஜா -யாழ்ப்பாணம்)
★ சக்கரங்கள் சுழலுகின்றன - (அ.சாந்தன் -சுதுமலை)
★ விடியலைத்தேடி - (செ.உதயகலா -யாழ்ப்பாணம்)
★ [illegible]ம் - (ஜோ.சுகந்தன் - திருநெல்வேலி)
★ செருப்பு - (க.கௌதமன் - மானிப்பாய்)
★ பயணம் - (அமரதாஸ் -கிளிநொச்சி)
★ ஒரு பயணத்தின் துகள்- (அல்பேட் பவுல்ஸ் - மன்னார்)

இது தொடர்பாக விடுக்கப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கான விசேட பயிற்சி எதிர்வரும் பெப்ரவரி 3ஆம் திகதிமுதல 12ஆம் திகதிவரை காலை 8.30 தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ்.பல்கலைக்கழக சிற்றிஹோலில் நடைபெறும். பயிற்சியானது இங்கிலாந்து திரைப்படத்துறை; திரைக்கதை எழுத்தாளரும் எடிட்டருமான நோவெல்லா ஸ்மித்தினால் வழங்கப்படும்.

தொடர்ச்சியாக நடைபெற்று வரும் எமது பயிற்சி முகாம்களுக்கான பயிற்சியாளர்களை தேர்வுசெய்யும் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து ஆதரவு நல்கிவரும், திருமதி கோகிலா மகேந்திரன், காவலூர் ராஜதுரை, குழந்தை சண்முகலிங்கம், சச்சிதானந்தசிவம், ராஜகோபால், வி.பி. சிவநாதன் மற்றும் புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் சிவச்சந்திரன் ஆகியோருக்கு ஸ்கிறிப் நெற் தன் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

இரண்டாம் சுற்றுக்காக தமது திரைக்கதைகளை அனுப்பிவைத்து தேர்வு செய்யப்படாமல் இருக்கும் படைப்பாளிகள் தொடர்ந்து தங்கள் ஆக்கபூர்வமான பங்களிப்புக்களை திரைக்கதை உருவாக்கல் துறையில், தாயக மண்ணில் வழங்க வேண்டுமென 'ஸ்கிறிப்நெற்' எதிர்பார்க்கிறது. இரண்டாம் சுற்று பயிற்சி முகாம் நடைபெறும் கால கட்டத்தில் இவர்கள் தங்கள் திரைக்கதைகள் பற்றிய ஆலோசனைகளையும் வழி நடத்தல்களையும் 'ஸ்கிறிப்நெற்' இணைப்பாளர் அல்லது திட்ட இயக்குநரை நேரில 'சிற்றி ஹோலில்' சந்தித்து பெற்றுக் கொள்ளலாம்.

ஈழத்து திரைப்படத்துறை வளர்ச்சி தொடர்பாக 'ஸ்கிறிப்நெற்' தனது வேலைத் திட்டங்களை விஸ்தரிக்க தீர்மானித்துள்ளது. இத்துறை சார்ந்த ஏனைய ஆர்வலர்களும், தமது பங்களிப்பை வழங்க வேண்டுமென 'ஸ்கிறிப்நெற்' எதிர்பார்க்கிறது. ஆர்வம் உள்ளவர்கள் 'கா.ஞானதாஸ்' திட்ட இணைப்பாளர், ஸ்கிறிப்நெற்', புறநிலைப்படிப்புகள் அலகு, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தமது தபால் தொடர்புகளை மேற்கொள்ளவும் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# இந்திய நிபுணரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் உள்ளடக்கம் கடந்த சில தினங்களாக கொழும்பு பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. உயர்பாதுகாப்பு வலயங்களை மாற்றியமைக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் அப்பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்படுவதாயின் விடுதலைப் புலிகளின் கனரக ஆயுதங்கள் மூன்றாம் தரப்பு நடுநிலைமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் விடுதலைப் புலிகளின் முன்னணி பாதுகாப்பு அரண்கள் பின் நகர்த்தப்படவேண்டுமென்றும் ஜெனரல் நம்பியார் கடும் நிபந்தனைகளை விதித்திருக்கிறார். இந்த நிபந்தனைகள் பற்றி திரு.பாலசிங்கத்திடம் கேட்டபோது இதனை ஏற்கமுடியாது என நிராகரித்தார்.

அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாவது:-

[illegible] பாதுகாப்பு வலயம் என்ற [illegible]யில் தமிழ்மக்களின் குடியிருப்புகள் மீது சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கிறது. இந்த இராணுவ ஆக்கிரமிப்பு குறித்து பிரயோகிக்கப்படும் சொற்பதங்களிலும் அவற்றின் [illegible]ர்த்த பரிமாணங்களிலும் பெருமளவு குழப்பம் நிலவுகிறது. போர் நெருக்கடியைத் தணித்தல், இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் என்ற கருத்துருவங்கள் படைபலக் குறைப்பு என்ற அர்த்தத்தில் திரிவு செய்யப்பட்டுள்ளன. மக்களின் குடியிருப்பு பிரதேசங்களை பெரும் தொகையில் இராணுவம் ஆக்கிரமித்து நிற்பதால் ஒரு நெருக்கடி நிலை உருவாகியிருக்கிறது. அத்தோடு பல லட்சம் மக்கள் தமது சொந்த வீடுகள், கிராமங்களுக்கும் சென்று குடியேற முடியாததால் இந்நெருக்கடி நிலை மேலும் தீவிரமடைந்து வருகிறது. இந்நெருக்கடி நிலை படிப்படியாக தணிக்கப்பட வேண்டும். எமது மக்களை அவர்களது சொந்த மண்ணில் மீளக் குடியமர்த்தி அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதன் வாயிலாகவே இந்நெருக்கடியை தளர்த்த முடியும். இயல்பு நிலையைத தோற்றுவிக்க முடியும். நெருக்குவாரங்கள் ஏதுமற்ற இயல்பான சூழ்நிலையில், சுதந்திரமாக எமது மக்கள் வாழ வேண்டும். நெருக்கடி தணித்தல், இயல்பு நிலை தோற்றுவித்தல் என்ற சொற்களுக்கு நாம் குறிக்கும் உண்மையான அர்த்தங்கள் இதுதான். படைபலத்தை குறைக்குமாறு அன்றி படைமுகாம்களை அகற்றுமாறோ நாம் இராணுவத்தைக் கோரவில்லை. எமது மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பிச் சென்று குடியமர வாய்ப்பளிக்க வேண்டும் என்று மட்டுமே நாம் ஸ்ரீலங்கா அரசைக் கேட்டுக் கொள்கிறோம். இடம்பெயர்ந்தவர்களும் அகதிகளும் தமது சொந்த நிலங்களுக்கும் வீடுகளுக்கும் திரும்பிச் செல்லும் உரிமையை எவராலும் மறுக்கமுடியாது. அப்படி மறுப்பது பாரதூரமான மனித உரிமை மீறலாகும்.

"அகதிகளை மீளக் குடியேற்றும் ஒரு மனிதாபிமானப் பிரச்சினை, இராணுவப் பிரச்சினையாகத் திரிவுபடுத்தி, பின்னர் அதனை ஓர் இராணுவ சமநிலை விவகாரமாக மாற்றி, அதன் விளைவாக இராணுவத்தின் பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படலாம் என ஜெனரல் நம்பியார் கருதுகிறார். இதே கருத்தையே யாழ்ப்பாணத் தளபதி ஜெனரல் பொன்சேகாவும் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஜெனரல் புருகோவ்டேயும் முன்வைத்திருப்பது கவனத்தில் கொள்ளவேண்டியது. இடம் பெயர்ந்தவர்களும் அகதிகளும் தமது சொந்த வீடுகளுக்கு திரும்பும் விவாகாரத்தை, வன்னிக்காடுகளில், முகாமகளில் முடங்கி வைக்கப்பட்டிருக்கும் எமது படையணிகளின் ஆயுதக் குறைப்புடன் தொடர்புபடுத்த முனைவது அபத்தமானதும் கேலிக் கூத்தானதுமாகும். பாதுகாப்பு வலயங்களை மாற்றியமைத்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது அரசின் பிரதான கடப்பாடு. இது குறித்து சிங்கள அரசு சர்வதேச இராணுவ நிபுணர்கள் எவரிடமும் ஆலோசனையைப் பெறலாம். ஆனால் அகதிகளை மீளக் குடியேற்றுவதை சாக்காக வைத்து, புலிகளின் ஆயுதங்களைக் களையலாமென எவரும் கருதினால் அதனை நாம் மூர்க்கமாக எதிர்த்தே தீருவோம்" - என்றார் பாலசிங்கம்.

*கேள்வி:* ஜெனரல் நம்பியாரின் விவரமான இறுதி அறிக்கையில் ஆயுதக் களைவு நிபந்தனையாக முன் வைக்கப்பட்டால் புலிகளின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

*பாலா:* அப்படியான யோசனைகளையும் நிபந்தனைகளையும் பரிசீலனைக்கு எடுக்காமலே நாம் நிராகரித்து விடுவோம்.

"இந்திய அமைதிப் படையின் தளபதிகளில் ஒருவராக பதவி வகித்து வடகிழக்கு போர் முனைகளில் நன்கு அனுபவம் பெற்றவர் ஜெனரல் நம்பியார். தமிழ் மக்களின் இலட்சியத்தில், விடுதலைப் புலிகள் எத்தகைய தீவிரமான பற்றுறுதி கொண்டவர்கள் என்பதை அவர் நன்கறிவார். தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முன்னராக ஆயுதங்களை களைய இந்தியா முனைந்தபோது, அந்த அநீதியான நிபந்தனையை எதிர்த்து, இந்திய இராணுவத்துடன் ஒரு கொடிய கெரில்லா யுத்தத்தில் குதித்தவர்கள் புலிகள் என்பதும் அவருக்குத் தெரியும். எனவே ஒரு விடுதலை இயக்கத்தின் உணர்வுகளை மதித்தும், இராணுவ ஆக்கிரமிப்புச் சிலந்தி வலைக்குள் சிக்கி அவலப்படும் எமது மக்களின் நிலை கருதியும் அவர் இப்பிரச்சினையை நிதானமாக அணுகுவாரென நாம் எதிர்பார்க்கிறோம். விடுதலைப் புலிப் போர் அணிகளின் கேந்திர இராணுவ சமபல நிலைக்குப் பாதகமாக அமையும் எவரினதும், எந்தவிதமான பரிந்துரைகளையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை" - என்றார் பாலசிங்கம்.

(ஐ)

### கண்ணிவெடித் தடை உடன்படிக்கை:

# புலிகள் இணங்கினால் அரசு கைச்சாத்திடும்!

கொழும்பு,ஜன.29

நிலக்கண்ணி வெடிகளின் பயன்பாட்டைத் தடுக்கும் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயார் என்று அரசாங்கம் உறுதியளித்திருக்கிறது. ஆயினும், விடுதலைப் புலிகளும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று அரசு கோருகின்றது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான கண்ணிவெடிகள் ஆய்வாளர் மாநாட்டில், அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன இந்த உறுதி மொழியை வழங்கினார்.

இம்மாநாட்டில் உரையாற்றிய வண.பத்தேகம சமித்ததேரோ எம்.பி. கண்ணிவெடிகளைத் தடைசெய்யும் இயக்கம் 1996 ஆம் ஆண்டில் சமய சமாதான அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட பொழுது அரசு - புலிகள், இராணுவம் உட்பட பல தரப்பினரும் எதிர்த்தனர் எனவும் ஆயினும், கண்ணிவெடிகளைத் தடைசெய்வதை அனைவரும் இன்று ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் எனவும் சொன்னார்.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படுத்தப்படவேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

சமித்த தேரோவின் கருத்துக்களை அங்கீகரித்து உரையாற்றிய அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன சமஷ்டி முறை நாட்டுப் பிரிவினைக்கு வழி வகுக்கும் என்று சில சமயத்தலைவர்கள் இன்று அச்சம் கொண்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது என்றார்.

கண்ணிவெடிகள் அகற்றும் பணிக்காக 15 கோடி டாலர்கள் வழங்கப் படுமென கனடா தூதுவர், மாநாட்டில் இணக்கம் தெரிவித்தார். (ஐ)



இஸ்ரேல் பொதுத் தேர்தல் வாக்களிப்பு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று நடைபெற்றது. இந்தத் தேர்தலில் தற்போதைய பிரதமர் ஏரியல் ஷெரோன் மீண்டும் பெருவெற்றி பெற்று பிரதமராவார் என வாக்களிப்பின் பின்னான கருத்துக்கணிப்புக்கள் தெரிவித்தன.

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பெஞ்சமின் நெத்தனியாகு வாக்களிக்கின்றார்.

# அமெரிக்காவின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது; பொய்யானது

## ஐ.நாவுக்கான ஈராக் தூதர் கருத்து

பக்தாத்,ஜன.29

பேரழிவு தரும் ஆயுதங்கள் ஈராக் வசம் இன்னும் இருக்கின்றன என்ற அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது; பெரும் பொய்யானது.

- இவ்வாறு ஈராக் தெரிவித்துள்ளது. ஐ.நாவிற்கான ஈராக் தூதர் மொஹமட் அல்டொயுறி இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் உளவுப் படையினரால் ஐ.நா. கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட தகவல்களும் செய்மதி மூலம் பெறப்பட்ட புகைப்படங்களும் ஆதாரமற்றவை என்றும் அவர் கூறினார்.

1990இல் அமெரிக்கப் படையினர் ஈராக்கில் நடத்திய சரமாரியான குண்டுத் தாக்குதல்களால் ஈராக் வசம் இருந்த பேரழிவு தரும் ஆயுதங்கள் யாவும், அழிக்கப்பட்டுவிட்டன என்று அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்ரன் கூறிய குறிப்புரைகளையும் அவர் எடுத்துக்காட்டினார்.

தனக்கு எதிராகச் சுமத்தப்பட்ட கடுமையான குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியிலும் கடந்த டிசெம்பர் மாதம் தன்னுடைய ஆயுத இருப்புப் பற்றிய 12ஆயிரம் பக்கங்கள் அடங்கிய அறிக்கையை ஈராக் ஐ.நா. வசம் சமர்ப்பித்திருந்தது. அதில் தரப்பட்ட எந்த விடயங்கள் பற்றிய கேள்விகளுக்கும் விடையளிக்கவும் அவற்றை சுமுகமாகத் தீர்க்கவும் வேண்டிய ஏற்பாடுகளை செய்வதற்கு தாம் தயாராக இருப்பதாக அந்த அறிக்கையில் ஈராக் தெரிவித்திருந்ததாகவும் மொஹமட் மேலும் தெரிவித்தார்.

எனவே ஈராக்கில் மேலதிக சோதனைகளை நடத்தவேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (ம)



ஆப்கானில் நிலைகொண்டுள்ள அமெரிக்க மற்றும் பன்னாட்டுப் படைகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே பாகிஸ்தான் எல்லையோரத்தில் உள்ள மலைப் பகுதியில் கடும் சண்டை இடம்பெற்றுள்ளது. அமெரிக்க குண்டு வீச்சு விமானங்கள் மலைப் பகுதிகளில் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை நடத்தின. 200 அமெரிக்கப்படையினரும் நூற்றுக்கணக்காக பன்னாட்டுப்படையினரும் இந்தத் தாக்குதலில் பங்குபற்றின. அமெரிக்காவின் ஏ.சி. - 130 போர் விமானம் மலைப்பகுதியில் தாக்குதல் நடத்துவதைப் படத்தில் காணலாம்.

# ஆசிரியர் வெறிச்செயல்; 4 மாணவர் பலி!

மனநிலை பாதிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவர் சீனாவில் 4மாணவர்களைப் படுகொலை செய்துள்ளார்.

இக்கோரச் சம்பவம் குவாங்தாங் மாகாணத்திலுள்ள யங்கான் பாடசாலையில் நிகழ்ந்தது.

இந்தப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக சென் பைகுவான் பணியாற்றி வந்தார். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அவர் மனநிலை பாதிக்கப்பட்டார். சிகிச்சைக்குப் பின்னர் மீண்டும பணியில் சேர்ந்தார்.

கடந்த சனிக்கிழமை காய்கறி வெட்டும் கத்தியை எடுத்துக்கொண்டு மாணவர்கள் இருக்கும் அறையை நோக்கி ஓடிய அவர் அங்கிருந்த ஆறு மாணவர்களையும் ஓர் ஆசிரியரையும் கத்தியால் கண்டபடி வெட்டினார். இந்தத் தாக்குதலில் 4மாணவர் கள் உயிரிழந்தனர்.

இதுபற்றிய தகவல் அறிந்தவுடன பொலஸார் அங்கு விரைந்து வந்தனர். அதற்குள் சென் பைகுவான் தப்பியோடி பாடசாலையின் மேல் பகுதிக்குச் சென்றுவிட்டார். நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் அவரைப் பொலீஸார் கைதுசெய்தனர். இச்சம்பவம் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

## ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதில்

# ஈராக்கின் முழு ஒத்துழைப்பு இல்லை ஆயுதப் பரிசோதகர்கள் அறிவிப்பு!

## முதலாவது அறிக்கை பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிப்பு

நியூயோர்க்,ஜன.29

ஈராக்கிடம் இருந்து பேரழிவு தரும் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்பதற்கான ஐ.நா. தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு ஈராக் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவில்லை.

- இவ்வாறு ஈராக்கில் ஆயுத சோதனை நடத்திவரும் ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்களின் தலைவர் ஹன்ஸ் பில்க்ஸ் தெரிவித்துள்ளார். அவர் தனது முழுமையான அறிக்கையை திங்களன்று ஐ.நா. பாதுகாப்புச் சபையின் முன் சமர்ப்பித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.





ஈராக்கில் கடந்த இரு மாதங்களாக ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர். ஈராக் அணு ஆயுத உற்பத்தியை மீண்டும் ஆரம்பித்ததா என்பது குறித்தும் சோதனைகள் நடத்தப்பட்டன. அது தொடர்பான அறிக்கையை சர்வதேச அணுசக்தி நிறுவன தலைவர் எல் - பராடி தெரிவித்தார்.

ஹன்ஸ் பில்க்ஸ் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பேரழிவு தரும் ஆயுதங்களைக் களையவேண்டும் என்ற ஐ.நாவின் தீர்மானத்தை செயற்படுத்தவேண்டும் என்பதை ஈராக் உண்மையிலேயே ஏற்கவில்லை. அதனை உண்மையில் - சரியாக - நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இன்றுவரையில் அது நினைக்கவில்லை. ஆயுத சோதனை நடத்துவதற்கு அந்த நாடு ஒத்துழைப்பு வழங்குகின்றது. ஆனால், அணு ஆயுத விவரங்களைத் தருவதில் அது மேலும் உண்மையாக நடந்து கொள்ளவேண்டும்.

அணு ஆயுதங்கள் குறித்து ஈராக் அளித்த விவரங்கள் போதாது. எங்களைப் பொறுத்தவரையில் கொள்கையளவில் ஐநாவுடன் ஒத்துழைப்பதாக ஈராக் முடிவு செய்துள்ளதாகவே தோன்றுகின்றது.





சோதனைகளுக்கு வழங்கப்பட்ட கால எல்லை போதாது. மேலும் கால அவகாசம் தரப்படவேண்டும். பல முக்கிய விடயங்களுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை.

★ ஈராக் போருக்கு முன்பிருந்து இன்றைய காலகட்டம்வரை அறிவிக்கப்படாத சட்டவிரோதமான ஆயுதங்களின் எண்ணிக்கை.

★ அங்கு கிடைத்த 6 ஆயிரம் வெற்று இரசாயனக் குண்டுகள் குறித்து பக்தாத் தெளிவான விளக்கம் அளிக்கவில்லை.

★ அந்திரெக்ஸ் பவுடர், விஷ வாயுக்கள் போன்றனவற்றை ஈராக் தயாரித்துள்ளமை தெரியவந்துள்ளது. ஆனால், அந்திரெக்ஸ் பவுடர்களை அழித்தமைக்கான தகுந்த ஆதாரங்களை அது சமர்ப்பிக்கவில்லை.

★ ஈராக் விஞ்ஞானிகள் 11 பேரிடம் விசாரணைகள் நடத்த விரும்பினோம். ஆனால் அதற்கான அனுமதி தரப்படவில்லை.

அணு ஆயுதங்கள் பற்றி ஏற்கனவே ஈராக் தெரிவித்த விவரங்களை விட சற்றுக் கூடுதலான விவரங்களே அது சமர்ப்பித்த 12ஆயிரம் பக்கங்கள் கொண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை -

ஈராக் 1990க்குப் பின்னர் தனது அணு ஆயுத தயாரிப்பினை மீண்டும் ஆரம்பித்ததற்கான சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை என்று சர்வதேச அணுசக்தி நிறுவனத் தலைவர் எல்-பராடி சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இது குறித்து முழுமையான சோதனை நடத்துவதற்கு இன்னும் கால அவகாசம் தேவை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பாதுகாப்புச் சபை இன்று விவாதிக்கும்

நியூயோர்க்,ஜன.29

ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் ஈராக்கில் கடந்த இரு மாதங்களாக மேற்கொண்டு வந்த சோதனை நடவடிக்கைகள் குறித்த முதலாவது விரமான அறிக்கையை திங்களன்று ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்தனர். அது தொடர்பாக பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பு நாடுகளும் இன்று புதன்கிழமை கூடி ஆராயவுள்ளன.

ஐ.நா. தீர்மானத்துக்கு ஈராக் முழுமையாக ஒத்துழைக்கவில்லை என்று பரிசோதகர் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில் இன்றைய கூட்டம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றி இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

இதற்கிடையில் -

ஆயுதப் பரிசோதகர்கள் ஈராக்கில் தமது பணியை செவ்வனே மேற்கொள்வதற்கு அவர்களுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் தெரிவித்துள்ளார். (ம)

## பெப்ரவரி நடுப்பகுதியில் ஈராக் மீது தாக்குதல்!

வாஷிங்ரன்,ஜன.29

பேரழிவு தரும் ஆயுதங்களைக் களைவதற்கு ஈராக் மறுத்துவருவதாக ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் குழுவின் அறிக்கை தெரிவிப்பதால் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் அமெரிகக்ப் படைகள் ஈராக்கைத் தாக்கும் சாத்தியங்கள் இருப்பதாக அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதிபர் புஷ் உத்தரவிட்டதும் இந்தப் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்.

ஆனால், அதற்கு முன்பதாக ஈராக் ஏதாவது ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டால் அக்கணமே ஈராக்கின் தாக்குதலுக்கு ஏற்றவாறு அமெரிக்கப்படைகள் தமது நடவடிக்கையை ஆரம்பிக்கும் என்றும் பென்ரகன் வட்டாரங்கள் தெரிவித்தன. ஈராக்கின் நடவடிக்கைக்கு ஏற்றவாறு அமெரிக்கப் படை நடவடிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

பக்தாத் மற்றும் அதனைச் சூழவுள்ள வான்பரப்பில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட அமெரிக்க உளவு விமானங்கள் எடுத்த புகைப்படங்கள் மூலம் ஈராக்கின் நிலைகள் பற்றி அமெரிக்கப் படையினர் அறிந்துள்ளனர். போர் மூண்டால் பொதுமக்கள் இலக்குகளைத் தாக்குவதை அமெரிக்கா கூடுமானவரையில் தவிர்த்துக் கொள்ளும் என்றும் பென்ரகன் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ம)

☛ மேலும் உலகச் செய்திகள் 1 ஆம் பக்கத்தில்

# பில்க்ஸின் அறிக்கை தொடர்பாக உலக நாடுகள் மாறுபட்ட கருத்து

ஐ.நா. தீர்மானத்துக்கு ஈராக் முழுமையாக ஒத்துழைக்கவில்லை என்று ஆயுதப் பரிசோதனைக் குழுத் தலைவர் ஹன்ஸ் பில்க்ஸ் பாதுகாப்புச் சபையில் தெரிவித்த அறிக்கையில் கூறியிருந்தது குறித்து உலக நாடுகள் பலவும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

யுத்தம் தவிர்க்கப்படவேண்டுமானால், ஐநா. பணியாளர்களுக்கு தனது முழுமையான - பூரணமான - ஒத்துழைப்பை ஈராக் வழங்கவேண்டும் என்று ஐ.நாவுக்கான பிரிட்டிஷ் தூதர் சேர் ஜேர்மி கிரின்ஸ்டொக் தெரிவித்தார்.

ஈராக் வசம் என்ன இருக்கின்றது என்பதற்கான ஆதாரங்களையும் ஆவணங்களையும் அது வெளியிடவேண்டும் அதுவே இந்தப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாண உதவும் என்றார் அவர். இதற்கு ஈராக் ஐ.நாவுடன் 100 சதவீதம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது விடயத்தில் கருத்து வெளியிட்ட ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் ஜோன் நிக்ரோபொனெட், ஹன்ஸ் பில்க்ஸ் மற்றும் எல்-பராடி ஆகியோரின் அறிக்கை ஈராக் தன்னிடமுள்ள பேரழிவு தரும் ஆயுதங்களைக் களையும் எண்ணத்துடன் இலலை என்று தெளிவுபடுத்தியுள்ளது என்று கூறியுள்ளார்.

இதற்கு மாறாக ஜேர்மன் அதிபர் ஜெர்ஹார்ட் ஸ்குருடர் கருத்து வெளியிட்டுள்ளார். இந்த அறிக்கையின் அடிப்படையில் ஈராக் மீது எந்தவொரு பலப்பிரயோகத்துக்கும் நாம் அனுமதிக்கப்போவதில்லை என்று அவர் சொன்னார். ஐ.நா பரிசோதகர்களுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படும் என தான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

"எங்களுடைய கருத்து இது சரியானது என்பதுதான். அடுத்த நடவடிக்கை குறித்து நாம் விவாதிக்க வேண்டும். ஐ.நா. பரிசோதகர்கள் தமது பணியை செவ்வனே செய்து முடிப்பதற்கு அவர்களுக்கு மேலும் கால அவகாசம் தரப்படவேண்டும்" - என்றார் அவர்.

ஈராக்கில் ஐ.நா. பணியாளர்கள் தமது சோதனைகளை முழுமையாக நடத்துவதற்குத் தேவையான கால அவகாசத்தை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று பிரான்ஸ் அதிபர் ஜ்க் ஷிராக்கும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார அமைச்சர்களும் ஐ.நா. பணியாளர்களுக்கு கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா மற்றும் ரஷ்யாவும் கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளன. இராணுவ நடவடிக்கை இல்லாமல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்று சீனா கேட்டுள்ளது.

இஸ்லாமிய சமூகமும் அமெரிக்காவின் போர் நிலைப்பாட்டுக்கு எதிரான ஒரு நிலையையே எடுத்துள்ளன. உலகின் மிகப்பெரும் இஸ்லாமிய நாடான இந்தோனேஷியா ஈராக்குக்கு எதிரான எந்த ஒரு தாக்குதலையும் நிராகரித்துள்ளது. சிரியா, பஹ்ரைன், யேமன் ஆகிய நாடுகளும் அதனை ஆதரித்துள்ளன.

இஸ்ரேல் மற்றும் அதன் நேச நாடுகள் சில ஈராக் மீதான தாக்குதலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும் இந்த நாடுகளில் இருக்கும் முஸ்லிம்கள் இதற்கு ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள் என்றே கூறப்படுகின்றது.

# முதலாம் ஆண்டு நினைவு நாள்



மண்ணகம்
16
-
01
-
1911

விண்ணகம்
09
-
02
-
2002

## திருமதி தம்பு சின்னத்தங்கம்

திதி: 29.01.2003

பாசத்தின் பிறப்பிடமாய் நேசத்தின் உறைவிடமாய்
காருண்ய வள்ளலாய் கருணைத் தெய்வமாய்
எம் நெஞ்சில் அணையா ஒளி விளக்காய்
வீற்றிருக்கும் எம் அன்னையே! உமது நினைவுகள்
என்றும் எம் மனதில் நிலைத்திருக்கும்.

நினைவு கூரும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*உடுவில் அம்மன் வீதி,*
*உடுவில்.*

(13786)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் நாகரத்தினம்

உடுப்பிட்டியைச் சேர்ந்த வைத்திலிங்கம் நாகரத்தினம் 27.01.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம் - குஞ்சுப்பிள்ளையின் அன்பு மகனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் திலகவதி குலேந்திரன் (ஜேர்மனி), கிருபானந்தன் (லண்டன்), குகதாசன், நந்தாவதி, பிறேமாவதி (லண்டன்), நகுலன் (போராளி), கமலவதி (மாவீரர்), ரூபாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமநாதன், சகுந்தலாதேவி (ஜேர்மனி), சுசிகலா, பேரின்பதாசன் ஆகியோரின் மாமனாரும் சாமினி, சயந்தினி, நிஷாந்தினி, நிரோஜினி, கஜேந்திரன், கௌதினி ஜனார்த்தனன், அபிசாரணி, ஜனார்த்தனன், சரணியா, தயானா, ஹரீசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.01.2003) புதன்கிழமை பி.ப.3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வல்வை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குகதாசன் *(குணம் - மகன்).*

*கரணவாய் மேற்கு,*
*கரவெட்டி.*

(13808)

## நெதர்லாந்து தூதுக்குழு மட்டக்களப்புக்கு!

மட்டக்களப்பு,ஜன.29

நெதர்லாந்து நாட்டின் தூதுக்குழு ஒன்று நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்கு விஜயஞ்செய்தது.

அங்குள்ள நிலைவரங்களை நேரில் பார்வையிட்ட அவர்கள் கண்காணிப்புக்குழு, யு.என்.டி.பி., மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர். (ம-4)


CHEMISTRY CENTRE

83, பலாலி வீதி, கந்தர்மடம்

A/L 2004
PHYSICS PAPER

Wed. 4-5p.m.- பல்தேர்வு வினா
Thurs. 4-5p.m. - கட்டுரை வினா
Fri. 4-5 p.m. - அமைப்பு கட்டுரை -வினா

By:-
சிவலிங்கம் *B.Sc.(spl.)*

(4709)


# பதினோராவது ஆண்டு நினைவு தினம்

பிறப்பு
04
-
05
-
1915



இறப்பு
17
-
01
-
1992

## அமரர் P.M.இராசரத்தினம்

*(முன்னாள் காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளரும்)*

"இவ்வுடல் பஞ்ச பூதங்களால் ஆனது; என்றாவது ஒருநாள் இது அழிவது உறுதி. ஆனால், அதன் உள்ளிருப்பவருக்கு பிறப்புமில்லை இறப்புமில்லை. உள்ளிருப்பவர் உண்மையில் இறைவனாகும்."

- பாபா - *(தமிழ் சனாதன சாரதி ஏப்ரல் 2000)*

*பிள்ளையார் கோயிலடி,*
*தாவடி,*
*கொக்குவில்.*

(13799)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தை மாதம் 16ஆம் நாள்(30.01.2003) வியாழக்கிழமை பகல் 11.20 மணிமுதல் 12.10 மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்

மாவிட்டபுரம்
திரு.திருமதி குகானந்தன் தம்பதிகளின்
செல்வப் புதல்வன் திருநிறை செல்வன்
**சீராளன்**
*(ஆசிரியர், யூனியன் கல்லூரி)*



இணுவில்
திரு.திருமதி கணேசன் தம்பதிகளின்
செல்வப் புதல்வி திருநிறை செல்வி
**ஜீவந்தினி**

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு இணுவில் **ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில்** திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தங்களுக்குரிய தனிப்பட்ட அழைப்பாக தயவுகூர்ந்து ஏற்றுக்கொள்ளவும்)

இங்ஙனம் தாங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி குகானந்தன் தம்பதிகள்
மஞ்சத்தடி, இணுவில்.

*(இருவீட்டார் அழைப்பு)*

திரு.திருமதி கணேசன் தம்பதிகள்
(இ.சிவபாதம் - நாதஸ்வரம்)
கே.கே.எஸ்.றோட், இணுவில்.

(13302)

# நினைவலையில் ஆண்டு 10



தோற்றம்
26-04-1926

மறைவு
19-01-1993

## அமரர்

## இ.ச.பேரம்பலம் *E.S.P.*

### அவர்கள்

*காரைநகர் - வாரிவளவு*

திதி: 29.01.2003

அமைதியாய் தொழில் நிறுவி ஆறாய் வழிகாட்டி
கண்ணியத்தால் உயர்வுபெற்று
கலங்கரை விளக்காய் உயர்ந்து நிற்க!
எம்மையெல்லாம் E.S.P. என்னும் நாமம்
எங்கும் உரிமையாய் உரைத்திடவே
இருள் அகற்றி இனிய தொழில் தந்து
வாழ்வுப் பாதைக்கு வழிகாட்டிய ஐயாவே!
மங்காத இலட்சியங்கள் மாண்புறவே - மக்கள் நாம்
சிந்தாமல் சீர்பெறவே பணிபுரிவோம்.

என்றும் நீங்காத உங்கள் நினைவுடன்

**- குடும்பத்தினர்.**

"மணிஓசை",
383, கோயில் வீதி,
நல்லூர்.

(13785)

உதயன்

## ஜனாதிபதியின் குற்றச்சாட்டு

புலிகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறி நடந்து வருகிறார்கள்; ஆள்களைக் கடத்திச் செல்கிறார்கள்; சிறுவர்களைப் படையில் சேர்த்துக்கொள்கிறார்கள் என்றெல்லாம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகள் மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார்.

புலிகளின் இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளால் மக்கள் சுதந்திரமாக நடமாடமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும் என்று இராணுவத் தளபதி லயனல் பலகல்லவையும் பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜாவையும் ஜனாதிபதி கடிதம்மூலம் பணித்துள்ளார்.

இந்த விடயத்தில் தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை இருவரும் ஒருவார காலத்தினுள் அறிக்கைமூலம் தமக்கு அறியத்தர வேண்டும் என்றும் ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

தாங்கள் ஆள்களைக் கடத்துவதில்லை என்றும், சிறுவர்களைப் படையில் சேர்த்துக்கொள்வதில்லை என்றும் புலிகள் பல தடவைகள் தெரிவித்திருக்கிறார்கள்.

புலிகளின் அரசியல் ஆலோசகரும் பேச்சுகளில் கலந்துகொள்ளும் புலிகள் குழுத்தலைவருமான அன்ரன் பாலசிங்கம் கடந்த 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெற்ற நான்காவது பேச்சுகளின் இறுதியில் உலகப் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது சிறுவர்களைப் புலிகள் படையில் சேர்த்துக்கொள்வதில்லை என்பதை மிகத் தெளிவாக விளக்கிக் கூறினார்.

"பதினெட்டு வயதுக்குக் குறைந்த எவரையும் புலிகள் தமது இயக்கத்தில் சேர்த்துக்கொள்வதில்லை என்பதைத் திட்டவட்டமாக - உறுதிபட - உங்களுக்குக் கூறிவைக்க விரும்புகின்றேன். அதுதான் எமது இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு, அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கொள்கை. இயக்கத்தில் சேர்ந்தவர்கள் உரிய வயதுக்குக் குறைந்தவர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும் சமயங்களில் அவர்கள், அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விடுகின்றனர்.

"ஆயுதப் பிணக்குகள் இடையே சிக்கும் சிறுவர்கள் தொடர்பான ஐ.நா. விசேட தூதுவர் ஒலரா ஒட்டுனு சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்திருந்தபோது நானும் தமிழ்ச்செல்வனும் அவரைச் சந்தித்தோம். சிறுவர்களை இயக்கத்தில் சேர்ப்பதில்லை என்ற உறுதிமொழியை நாம் அவருக்கு அளித்தோம்.

"18 வயதுக்கு உட்பட்டவர்களை ஆயுதப் போராட்டங்களில் சேர்க்கக்கூடாது என்ற ஐ.நா. பிரகடனம் கடந்த வருடம் வெளியானதை அடுத்து, இவ்விடயத்தை முழு அளவில் உறுதியாக நடைமுறைப்படுத்துவது என எமது தலைமைப்பீடம் முடிவு செய்தது.

"வன்னி உட்பட தமிழ்ப் பிரதேசங்களில் நிலவும் வறுமை, பட்டினி ஆகியவை காரணமாகவும் சிலர் தமது வீடுகளை விட்டு வெளியேறி இயக்கத்தில் சேர வருகிறார்கள். இவர்கள் பற்றிய உண்மை நிலையை நாம் விசாரணை செய்கின்றோம். வன்னியில் பிறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள் உங்களுக்குத் தெரியும். 18 வயதுக்குக் குறைந்தவர்கள் இருப்பது விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுகின்றனர்."

- இப்படி அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடுத்தினார்.

அதன் பின்னரும் கண்காணிப்புக் குழு மற்றும் சர்வதேச மனிதநேய அமைப்புகளின் அறிக்கைகளைச் சுட்டிக்காட்டி புதிதாகக் குற்றச்சாட்டை நீட்டுகிறார் ஜனாதிபதி. அறிக்கைகளில் இருப்பவை வெறும் முறைப்பாடுகளே தவிர ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்ட சம்பவங்கள் அல்ல. புலிகளின் எதிரிகளும், மாற்றுக் கட்சியினரும் சமாதான முயற்சிகளை முறியடிக்கக் கங்கணங்கட்டி நிற்பவர்களும் புலிகளை மாட்டிவைப்பதற்காக எந்தனை முறைப்பாடுகளை வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கு என்ன தடை இருக்கிறது?

இது ஜனாதிபதிக்குத் தெரியாத விடயம் அல்ல. தெரிந்தும் புலிகள் மீது குற்றம் சுமத்தி சட்ட ஒழுங்கு நிலைமை சீரழிந்து போகிறது என்று காட்டுவதன் நோக்கம் என்னவாக இருக்கமுடியும்?

தமக்கு அரசமைப்பு ரீதியாக உள்ள அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு ரணிலின் ஆட்சியைக் கவிழ்த்து, தமது கட்சியோடு தாம் அரசகட்டிலில் ஏறச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருப்பவர் அவர். அதற்காக சமாதானப் பேச்சு வேண்டாம், புலிகளோடு போர்செய்து அவர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கூச்சல் போட்டுவரும் ஜே.வி.பியினருடன் கூட்டுச்சேரப் பேச்சு நடத்தி வருகிறார்.

நாட்டில் புலிகளால் சட்டம், ஒழுங்கு நிலைமை சீரழிந்து மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று காட்டினால் நாடாளுமன்றத்தை, தாம் அளித்த உறுதிமொழிக்கு மாறாகக் கலைத்தாலும்கூட அதை நியாயப்படுத்தி விடலாம் என்று ஜனாதிபதி நம்புகிறார்போலும்! மக்கள் ஏமாந்தவர்கள் அல்லர் என்பதை ஜனாதிபதி மறந்துவிடக்கூடாது.

# புனரமைக்கப்பட்ட யாழ். நூலகம் அடுத்த மாதம் 10ஆம் திகதி திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

1981ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி சிங்களக் காடையர்களால் தீயிட்டுக் கொளுத்தி அழிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகம் மீண்டும் புதுப்பொலிவுடன் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்படவுள்ளது. அடுத்த மாதம் 10ஆம் திகதி புனரமைக்கப்பட்ட யாழ். நூலகம் திறந்துவைக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானத்தை யாழ். மாநகரசபை எடுத்துள்ளது என்று யாழ். மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையன் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி நூலகத்தை திறந்து வைப்பார்.

நூலகத்தை மக்கள் பாவனைக்கு விடுவதற்குரிய முழுமையான ஏற்பாடுகள் பூர்த்தியடையாதபோதும் எதிர்வரும் 10ஆம் திகதி நூலகத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளதாக மேயர் கந்தையன் தெரிவித்தார்.

நூலகத்துக்கான ஒரு தொகுதி நூல்கள் மாநகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தேவையான தளபாடங்களில் 85 வீதமானவை செய்துமுடிக்கப்பட்டுள்ளன. மிகவிரைவில் அவை நூலகக் கட்டடத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

முழுமையாக நூலகத்தை இயக்குவதற்குத் தேவையான ஆளணியைத் தருமாறு மாகாணசபையிடம் கேட்டுள்ளோம். அதுவரை தற்போது யாழ். செயலகப் பகுதியில் இயங்கிவரும் யாழ்.நூலகக் கிளையில் பணியாற்றிவரும் ஒரு தொகுதி ஊழியர்களுடனேயே பொது நூலகத்தை இயக்கவேண்டிய நிலை உள்ளது. - இவ்வாறு மேயர் கந்தையன் மேலும் தெரிவித்தார்.

1981ஆம் ஆண்டு யாழ். பொது நூலகம் எரிக்கப்படுவதற்கு முன்னர் தெற்காசியாவின் மிகச் சிறந்த நூலகமாக அது விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

மனித உரிமைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட

# காணாமற்போனோர் விசாரணை; முதற்சுற்று முடிவடைந்ததாக அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

வடபகுதியில் கடந்த 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளை மேற்கொள்வதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழு தனது முதல் சுற்று விசாரணைகளை நிறைவு செய்துள்ளதாக ஆணைக்குழுவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எம்.சி.எம்.இக்பால் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையிலான மூவர் கொண்ட குழு கடந்த 24ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் 25ஆம், 26ஆம் திகதிகளில் சாவகச்சேரியிலும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டது.

இந்த விசாரணைக்கென அழைக்கப்பட்ட 66பேரில் 53 பேரே விசாரணைகளுக்கு சமுகமளித்திருந்ததாகவும் இவர்களின் உறவுகள் 96ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடாநாட்டில் இடம்பெற்ற படையினரின் சுற்றிவளைப்பு மற்றும் வீதிச் சோதனைகளில் காணாமற்போனவர்கள் பட்டியலில் உள்ளவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட 232பேர் கொண்ட பட்டியலில் உள்ளவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களே இந்த 53 பேரும் ஆவர்.

இந்தப் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு இக்குழுவுக்கு அதிகாரம் இல்லாத காரணத்தினால் 96ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற்போனவர்கள் பற்றி இப்போது புதிதாகச் செய்த முறைப்பாடுகள் தொடர்பாக குழு விசாரணைகளை மேற்கொள்ளாது என்றும் -

உரிய நடவடிக்கைகளுக்காக அந்த முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் - இக்பால் தெரிவித்தார்.

விசாரணைகளின்போது கிடைத்த தகவல்களுக்கு அமைய காணாமற்போனவருக்கு என்ன நிகழ்ந்தது? அவர் எங்கு இருக்கிறார்? அவர் காணாமற்போனமைக்கு யார் காரணம்? போன்ற விபரங்களைஅறிவதற்கு குழு முழுமுயற்சிகளை மேற்கொண்டு அது தொடர்பான பெறுபேறுகளை விரைவில் முறைப்பாட்டுக்காரர்களுக்கு தெரிவிக்கும் எனவும் மேற்குறித்த திகதிகளில் நடைபெற்ற விசாரணைகளுக்கு சமுகமளிக்காதவர்கள் பிறிதொரு திகதியில் விசாரணைக்கு அழைக்கப்படுவார்கள் எனவும் மிகுதி முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் மார்ச் மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் மீண்டும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எனவும் இக்பால் மேலும் தெரிவித்தார். (ம-10)

தென்மராட்சிப் பிரதேசத்தில்

# மேலும் இரு படைமுகாம்களை இடமாற்றுவதற்கு நடவடிக்கை

தென்மராட்சி,ஜன.29

தென்மராட்சி பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள மேலும் இரு முகாம்களை படையினர் விரைவில் அங்கிருந்து அகற்றி மக்கள் குடியிருப்பு குறைந்த பகுதிகளில் முகாமிடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சரசாலை, மட்டுவில் பகுதிகளில் தங்கியுள்ள படையினர் அங்கிருந்து வெளியேறி கல்வயல் பகுதியில் உள்ள பத்து ஏக்கர் காணியிலும் -

சாவகச்சேரி நகரில் உள்ள படையினர் கோவில்குடியிருப்பு பகுதியில் உள்ள சிறுகைத்தொழில் திணைக்களத்தில் தும்பு உற்பத்தி நிலையக்கட்டடத்திலும் முகாமிடவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இவ்விரு இடங்களிலும் படையினர் முகாமிட்டால் சுமார் 30இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற நேரிடலாமென மக்கள் தெரிவித்தனர். (ம-117)

மீனவர்களின் நன்மை கருதி

# சாவற்கட்டு கிராமத்தில் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை

வலி.தெற்கு,ஜன.29

ஆனைக்கோட்டை சாவற்கட்டு கிராமத்தில் மீனவர்களின் நன்மை கருதி ஐஸ் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் உதவியுடன் இந்த ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முன்னர் பல ஐஸ் உற்பத்தி தொழிற்சாலைகள் இயங்கிவந்தன. எனினும், கடந்தகால போர் நடவடிக்கைகளினால் தொழிற்சாலைகள் யாவும் சேதமாக்கப்பட்டும், இயங்கமுடியாமலும் உள்ளன.

ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலைகள் இயங்காமல்போனதால் மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போதியளவு ஐஸ் கட்டிகள் இல்லாமையால் மீனவர்கள் தாம் பிடிக்கும் இறால், கணவாய், நண்டு போன்ற கடல் உணவுப் பொருள்களை பதனிட்டு பேணமுடியாது கஷ்டப்பட்டு வருகின்றனர்.

சாவற்கட்டைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சங்கம், தமது குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, கடல்வள அமைச்சரிடம் ஐஸ் கட்டி உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு நிதி உதவி வழங்குமாறு கோரியிருந்தது.

இவர்களின் கோரிக்கையை ஏற்று சாவற்கட்டு கிராமத்தில் ஐஸ்கட்டி உற்பத்திச் சாலையொன்றை நிறுவ ஒரு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்ய கடல்வள அமைச்சு முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-152)

**நாளை**

தை 16
வியாழக்கிழமை
(30.01.2003)
திதி : திரயோதசி
மாலை 5.53 வரை.
நட்சத்திரம்: பூராடம்
பின்னிரவு 1.47 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 8.06 - 9.36
ராகுகாலம் : 2.06 - 3.36
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

தனிமரம் தோப்பாகாது. ஆனால் தோப்பாவதற்கு அது துணை புரிகிறது.

கீரிமலையில் புதிதாக அமைக்கப்பட்ட

# குடிதண்ணீர் தாங்கியை ஜயலத் திறந்துவைப்பார்

யாழ்ப்பாணம்,ஜன.29

கீரிமலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர்த் தாங்கி எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன இதனைத் திறந்து வைக்கவுள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்.வரும் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன கீரிமலையில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர்த் தாங்கியைத் திறந்துவைத்த பின்னர் யாழ்.பொது நூலகத்திற்கு விஜயம் செய்து நூலகத்தில் மேலும் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைகள் மற்றும் வசதிகள் பற்றி நேரடியாகப் பார்வையிடவுள்ளார். குறிகாட்டுவான் இறங்குதுறைக்கும் அவர் செல்வார். இறங்குதுறையில் உள்ள பயணிகள் தங்குமிடத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகள் பற்றியும் கேட்டறியவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மாலை 3.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்திலும் அமைச்சர் கலந்துகொள்வார். (ம-8)

# அனுமதிச்சீட்டு இன்றி மருந்து விற்றவருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

மருத்துவரின் அனுமதிச்சீட்டு இன்றி மருந்து விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றினால் 500ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமநாதன் யசோதா (மெடி எயிட்ஸ், இருபாலைச் சந்தி) என்பவருக்கே நேற்றுமுன்தினம் இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, அனுமதிப்பத்திரம் இன்றி மருந்து விற்பனையில் ஈடுபட்ட கந்தையா பரம்சோதி (முருகன் மருந்தகம், கல்வியங்காடு) என்பவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். அவரை ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது. (ம-10)

# புலிகளின் ஆட்சேபம்!

வவுனியா புதுக்குளத்தில் புலிகளின் ஒலிபெருக்கி, ஒலிப்பதிவு நாடாக்கள் கைப்பற்றப்பட்டமை தொடர்பாக புலிகள் கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள், புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், கூட்டணி உறுப்பினர் மூர்த்தி, இராணுவ உயர் அதிகாரிகள், பொலீஸ் உயரதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புதுக்குளம் பகுதியில் தமது காரியாலயத்தினுள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர் தமது இயக்க உறுப்பினர்களை பயமுறுத்தி உபகரணங்களைப் பறிமுதல் செய்துள்ளதாக புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக தாம் உரிய நடவடிக்கை எடுக்கப்போவதாக இராணுவம், பொலீஸார் உறுதியளித்துள்ளனர் என்று புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எழிலன் மேலும் தெரிவித்தார். (ம)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணுலகில் 19 - 08 - 1925



விண்ணுலகில் 30 - 12 - 2002

### திருமதி மங்கையர்க்கரசி நவரத்தினம்

*அன்பின் அம்மாவே!*
*பண்பின் இருப்பிடமாய் இருந்து – எமக்கு*
*பாசமழை பொழிந்தீரே!*
*எமை விட்டுப் போவதைச் சிறிதும் சிந்தியாது*
*மறைந்ததன் மர்மமென்ன?*

இன்று (29-01-2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது தாயாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகியவற்றிலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*V.T.S. வீதி,*
*உரும்பிராய் தெற்கு.* (13745)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### மார்க்கண்டு கமலசேகரம்
(போட்டி மாமா)

மலர்வு 1940.02.10 — உதிர்வு 2002.02.08

திதி: 29.01.2003

*மலர்வும் உதிர்வும் காலத்தின் கட்டளை*
*ஆனால்,*
*நீங்கள் உதிர்ந்து போகவேண்டியவர் அல்லர்*
*சாம்பலாகிவிட்டாலும்..... எமது நெஞ்சத்தில்*
*நீறாக வாழ்கின்றீர்கள்!.....*
*எம்மீது வீசும் காற்றெல்லாம் உங்கள் குரல்*
*பூக்களெல்லாம் உங்கள் முகம்.....*
*பயிர் – தளிர்..... எல்லாம் உங்கள் அசைவு*
*வீதி எங்கும் நின் நடை தெரிகின்றது*
*எங்கள் நெஞ்சத்திலும் பிரபஞ்சத்திலும்*
*நீங்கள் தான்*
*நீங்கள் நடந்த இடம்..... எமது இல்லமெல்லாம்*
*உங்கள் கால் பதிந்த தடம்..... அவைதான்*
*எங்கள் சந்நிதி*
*நீங்கள் தந்த நினைவுகளே..... நிம்மதி!*
*உங்களது நினைவுகளோடு சங்கமிக்கும்....*

இன்று (29.01.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*"கமலவாசா"*
*சங்குவேலி, வடக்கு,*
*மானிப்பாய்.* (13711)

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.


# சுடர் ஒளி




விலை 14/=

27 – 01 – 2003 இதழில்

☆ தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அரங்கேற்றிய பொங்குதமிழ் பேரெழுச்சி

☆ கட்டவிழும் வக்கிரங்களும் பதிபுவதை உக்கிரங்களும்

☆ ஆட்டம் கண்ட அடித்தள நம்பிக்கையும் மகேஸ்வரனின் அதிரடி அறிக்கைகளும்

☆ அலைகடல் அணைப்பில் கோணமாமலை அமர்ந்த திருக்கோணேஸ்வரப் பெருமான்

☆ அழிவுகள் தந்திட்ட கறையும் விடிவென்ற பெயரில் மறைவும்

☆ அளவெட்டியில் உளவு விமானத்துக்கு என்ன வேலை?

மற்றும் சினிமா, விளையாட்டு, இணையத்தளங்களிலிருந்து, பித்தன் பதில்கள், க்ரைம் உட்பட பல்வேறு ஆக்கங்கள்

(C-26249)

# முதல்வர் என்.ஸ்ரீகாந்தா அறிக்கை:

# அரசிடம் ரெலோ நிதி வாங்குகிறதா? மகேஸ்வரன் நிரூபிக்க வேண்டும்!

## ஆதாரங்களைத் தர 2 வாரகால அவகாசம்

கொழும்பு,ஜன.29

அரசிடமிருந்து செல்வம் அடைக்கலநாதன் நிதி வாங்குகிறாரா?

- இந்து விவகார அமைச்சர் மகேஸ்வரன் இதற்கான ஆதாரங்களை நிரூபிக்கவேண்டும்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரொலோ) முதல்வர் என்.ஸ்ரீகாந்தா பத்திரிகைக்கு விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதன் விவரம் வருமாறு:-

"ரெலோ தலைவர் ஸ்ரீகாந்தா தாம் அரசிடம் எந்தவித நிதியும் வாங்கவில்லை என அறிக்கை விட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்தான் இந்த நிதியை வாங்குகின்றார். இவர் இப்போது நாடாளுமன்றத்துக்கு வருவ



தில்லை. இவர் இந்த நிதியை கட்சிக்கும் கொடுப்பதில்லை.

இப்படியிருக்கும்போது ரெலோ தலைவர் ஸ்ரீகாந்தாவுக்குக் கட்சிக்குள் என்ன நடக்கின்றதென்று தெரியவில்லையோ அல்லது முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்க முற்படுகின்றாரோ தெரியவில்லை".

- இவ்வாறு அமைச்சர் தி.மகேஸ்வரன் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் எமது கட்சிக்கு எதிராக அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டு, இப்போது எமது கட்சித் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் மீது நேரடியாகத் தொடுக்கப்பட்டுள்ளது.

இது மிகப் பாரதூரமான குண்டைப் போட்டு கட்சி ஒன்றின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒருவர் மீது அமைச்சர் ஒருவர் சுமத்தியிருக்கும் நிதி மோசடிக் குற்றச்சாட்டு.

இக்குற்றச்சாட்டினை மிகப் பாரதூரமான ஒன்றாகவே நாம் கருதுகின்றோம்.

இக்குற்றச்சாட்டை தான் தெரிவிப்பதற்கு ஏதுவான ஆதாரங்கள் என்ன, எவை? என்பதை அமைச்சர் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்; ஆதாரங்கள் அனைத்தையும் பகிரங்கமாக சமர்ப்பிக்கவேண்டும்.

இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் இதனை அமைச்சர் மகேஸ்வரன் செய்தாகவேண்டும்.

அமைச்சர் இதனைச் செய்வாராக இருந்தால், எமது கட்சித் தலைவர் என்றுகூடப்பாராமல், செல்வம் அடைக்கலநாதன் எம்.பியிடம் எமது கட்சித் தலைமைக் குழு விளக்கம்கோரும். அதனைத் தொடர்ந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும். எனவே, ஆதாரங்களை பகிரங்கமாகச் சமர்ப்பிக்க முடியுமா அமைச்சரால்....?

இதனை அமைச்சருக்கு ஒரு பகிரங்க சவாலாகவே விடுக்கின்றேன். ஆனால், எதிர்வரும் இரு வாரங்களுக்குள் தனது குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களைப் பகிரங்கப்படுத்த அமைச்சர் தவறுவாராகவிருந்தால், 'அவதூறு' விளைவித்த குற்றச்சாட்டு ஒன்றுக்கு நீதிமன்றத்தின் படிகளில் அவர் ஏறி இறங்கவேண்டியிருக்கும்.

தற்போது இந்தியா சென்றிருக்கும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. இன்னும் சில தினங்களில் நாடு திரும்பியவுடன், அமைச்சரின் குற்றச்சாட்டுக்கு பகிரங்கமாகப் பதிலளிக்குமாறு நான் அவரைக் கோருவேன் - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பம்

வலி.தெற்கு,ஜன.29

உடுவில் குமரகோட்டம் அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான புனராவர்த்தன சம்புரோக்ஷன, அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர் நூதனமூர்த்தி பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஏழாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.17மணிக்கும் 10.05 மணிக்கும் இடையில் நடைபெறவிருக்கின்றது.

பிரதிஷ்டா குருவாக வைதிககிரியா ரத்தினம் மயிலணி பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்த சிவாச்சாரியார் கும்பாபிஷேகத்தினை நடத்துவார்.

கடந்த திங்கட்கிழமை முதல் கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி புதன்கிழமை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்(ஐ-152)

# மாலைதீவு - இலங்கை இடையில் சிறைக்கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம்

## விரைவில் கைச்சாத்து என்கிறார் பிரதி வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு,ஜன.29

மாலைதீவுடன் சிறைக்கைதிகள் பரிமாறும் வேலைத் திட்டமொன்றை மேற்கொள்வது தொடர்பான கடிதமொன்றை மாலைதீவு அரசுக்கு சமர்ப்பித்துள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் லால் தர்மபிரிய தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

பலவிதமான குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டு தற்போது மாலைதீவு சிறைகளில் இருக்கும் இலங்கையரைத் தாயகத்துக்கு அழைத்து வருவதற்காகவே இச்சிறைக்கைதிகள் பரிமாறும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

தற்போது மாலைதீவு சிறைகளில் ஏறத்தாழ 40 இலங்கையர்கள் கைதிகளாகவுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. சிறைக்கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக மாலைதீவு அரசின் பதிலை எதிர்பார்த்துள்ளோம்.

மாலைதீவில் உள்ள இலங்கைத் தூதரகம், இலங்கைச் சிறைக் கைதிகள் தொடர்பாக அதிக அக்கறை கொண்டுள்ளது. வருடத்திற்கு மூன்று, நான்கு தடவைகள் கைதிகளின் தேவைகள் குறித்து ஆராய்ந்து வருகிறது.

தூதரகத்தின் மூலம் கைதிகளின் விவரங்களைத் திரட்டுவதற்கும் அமைச்சு நடவடிக்கையெடுத்து வருகிறது - என்று பிரதி அமைச்சர் லால் தர்மபிரிய தெரிவித்தார். (ம)

# புற்றாளை ம.வித்தியாலயத்தில் புதிய கட்டடத் திறப்பு விழா

செம்பியன்பற்று,ஜன.29

புலோலி, புற்றாளை மகா வித்தியாலயத்தில் 12 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தை எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி திறந்து வைப்பார்.

இவ்வைபவம் புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும். அதிபர் திருமதி இந்திரநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

இந்தக் கட்டடத்தை நிறுவ புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் 7 லட்சம் ரூபாவையும், புனர்வாழ்வு அமைச்சு 5 லட்சம் ரூபாவையும் வழங்கி உதவின. (ஐ-36)

## வடமராட்சி கிழக்கில்

# வீதிகள், பாலங்களை புனரமைக்க ஏற்பாடு

மருதங்கேணிப் பிரதேசத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக உணவு விவசாய ஸ்தாபனம் ஆகியவற்றின் உதவியுடன் வீதிகள், பாலங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையுள்ள 19 கிலோமீற்றர் வீதி, 5 பாலங்கள், 28 நீர் வடிந்தோடும் கால்வாய்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கி 'நிக்கொட்' திட்டத்தின்கீழ் இப்புனரமைப்பு வேலைக்கான நிதியினை ஒதுக்கீடு செய்யவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வடக்கு - கிழக்கு மாகாண 'நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன், யாழ்.மாவட்ட 'நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம், உலக உணவு விவசாய ஸ்தாபன பிரதிநிதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர், கட்டடத் திணைக்கள பொறியியலாளர் ஆகியோர் மருதங்கேணிப் பிரதேசத்திற்குச் சென்று, வீதிகளைப் பார்வையிட்டனர். புனரமைப்பு வேலையினை ஆரம்பிப்பது சம்பந்தமாகவும் கலந்துரையாடினர். (ஐ-182)

# உள்ளூரில் உருளைக்கிழங்கு அறுவடைப் பணி ஆரம்பம்

அரியாலை,ஜன.29

குடாநாட்டில் விவசாயிகளால் பயிரிடப்பட்ட உள்ளூர் உருளைக் கிழங்குகளின் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

காலம் முந்தி உருளைக்கிழங்கைப் பயிரிட்ட விவசாயிகள் தற்போது அதனை அறுவடை செய்து வருகின்றனர்.

இந்த உள்ளூர் உருளைக்கிழங்கு திருநெல்வேலி சந்தையில் கிலோ 40ரூபா முதல் 50ரூபா வரை விற்பனையாகின்றது.

இதேவேளை - தென் பகுதியில் இருந்து எடுத்துவரப்படும் உருளைக்கிழங்கு யாழ். நகரில் கிலோ 65ரூபாவாக விற்கப்படுகின்றது.

உள்ளூர் உருளைக்கிழங்கின் அறுவடை ஆரம்பமாகி அதனைச் சந்தைப்படுத்தும் வரை, வர்த்தகர்கள் தென்பகுதியில் இருந்து உருளைக் கிழங்கைத் தருவிப்பதை நிறுத்த வேண்டும் என்றும் -

உள்ளூர் உருளைக்கிழங்கைச் சந்தைப்படுத்துவதை இறக்குமதி பாதிக்கும் என்றும் - விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ-17)

# மருதங்கேணி ஆஸ்பத்திரி கட்டடவேலை ஆரம்பம்

வடமராட்சிகிழக்கு,ஜன.29

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையினை புதிதாக அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கடந்த வியாழக்கிழமை அடிக்கல்நட்டு வேலையினை ஆரம்பித்து வைத்தார்.

இவ்வைபவம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வே.ப. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி 'நிக்கொட்' பணிப்பாளர் ரி.லங்காநேசன், யாழ்.மாவட்ட 'நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம், கடற்புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த யாழ்மன்னன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் இவ்வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளது.

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் இவ்வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டியும், மின்சாரம் வழங்குவதற்கான ஜெனரேட்டரும் வழங்கப்படவுள்ளன. (எ-182)

# ஈச்சமோட்டையில் தவறணையை மூடிவிடும்படி கேட்டு மகஜர்

பொதுமக்கள் நெருக்கமாக வாழும் ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் அமைந்திருக்கும் கள்ளுத் தவறணையை அங்கிருந்து அகற்றுமாறு ஈச்சமோட்டை சனசமூக நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மகஜர் ஒன்றை மேற்படி சனசமூக நிலையம் அரியாலை பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளித்துள்ளது.

பொதுமக்கள் நெருக்கமாக வாழும் இந்தப் பகுதியில் கள்ளுத் தவறணை அமைந்திருப்பதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

பொதுமக்களின் வசதி கருதி இந்தக் கள்ளுத் தவறணையை உடனடியாக அப்புறப்படுத்துமாறும் இல்லையேல இந்தத் தவறணையை இயங்கவிடாது போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும சனசமூக நிலையத்தின் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)



சமூக சேவைகள் அமைச்சு வட இலங்கை ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்ல ஆச்சிரமத்துக்கு மின்பிறப்பாக்கி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இந்த மின்பிறப்பாக்கியை சமூக நலநோம்பு அமைச்சர் ரவி சமரவீர, ஆச்சிரம தர்மகர்த்தா சபைத் தலைவர் டாக்டர் என்.பத்மநாதனிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# செய்தித் துளிகள்

## தொற்றுநோய் விழிப்புணர்வு

வடமராட்சி கிழக்கு,ஜன.29

மருதங்கேணிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள வீடுகளில் உள்ள கிணறுகளுக்கும் மற்றும் மக்கள் பாவிக்கும் பொதுக் கிணறுகளுக்கும், சுகாதாரப் பகுதியினர் குளோரின்போடும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதேவேளை, தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு திரைப்படங்களும் காண்பிக்கப்பட்டு வருகின்றன. (ஐ-182)

## பளையில் தையல் பயிற்சி

தென்மராட்சி,ஜன.29

பளைப் பிரதேச செயலகக் கிராமிய அபிவிருத்திப் பிரிவினின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுப் பிரிவினர் இலவச தையல் பயிற்சி வகுப்பினைப் பளையில் விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்றவுள்ள யுவதிகளுக்கான நேர்முகப் பரீட்சை அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள்

தென்மராட்சி,ஜன.29

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினர் கச்சார்வெளி கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள 219 குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், வாம்பு, வாளி உட்பட உணவுப்பண்டம் அல்லாத பொருள்களை வழங்கியுள்ளனர்.

இதேவேளை, பளைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த வறுமைக் கோட்டின்கீழ் உள்ள 450 குடும்பங்களுக்கு சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை லங்கா சேவா நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## செயலகத்தில் கலந்துரையாடல்

வலி.மேற்கு,ஜன.29

இடம்பெயர்ந்தவர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக யாழ்.மாவட்ட அரசாங்க செயலகத்தில் பெப்ரவரி 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

கணக்கெடுப்பாளர்களாகிய சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோரை இதில் கலந்துகொள்ளுமாறு அரச அதிபர் செ. பத்மநாதன் பணித்துள்ளார். பங்குபற்றுவோருக்கு அதற்கான கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.(ஐ-175)

## கிராம அலுவலர்கள் பதவி உயர்வு

வடமராட்சிகிழக்கு,ஜன.29

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இரு கிராமசேவை அலுவலர்கள் தரம் ஒன்றிற்கு பதவி உயர்வுபெற்றுள்ளனர்.

ஆழியவளை கிராமசேவை அலுவலர் வி.நடராசா, நாகர்கோவில் மேற்கு கிராம சேவை அலுவலர் வி. தாமகுலசிங்கம் ஆகிய இருவருமே பதவி உயர்வினைப் பெற்றுள்ளார்கள். (ஐ-182)

## சுரேஷ் அணியின் புதிய செயலகம்

யாழ்ப்பாணம்,ஜன.29

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (சுரேஷ் அணி) தமது கட்சியின் மாவட்ட செயலகம் ஒன்றைப் புதிய முகவரியில் திறந்துள்ளனர்.

'இல.6, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் கடந்த 27ஆம் திகதி முதல் இச்செயலகம் இயங்கி வருகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய செயலகத்துடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் 021 222356, என்னும் தொலைபேசி இலக்கமூடாகவும் தொடர்புகொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



திரு. திருமதி பெருமாள் - தமயந்தி
தம்பதியினரின் செல்வப் புதல்வன்

## செல்வன் திவ்யன்

(அக்ஷயன்)

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (29.01.2003) புதன்கிழமை தன்னுடைய இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

திவ்யனை அன்பு அம்மா, அப்பா, தாத்தா, அம்மம்மா, வவுனியாவில் வசிக்கும் அப்பம்மா, அத்தை, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மாமாமார், அத்தைமார், பெரியம்மா, பெரியப்பா, பிரான்ஸில் வசிக்கும் பெரியம்மா, பெரியப்பா, அக்காமார், அண்ணா, தம்பி, தங்கை, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அன்ரா, ஜேர்மனியில் வசிக்கும் அங்கிள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் வாழ்க வாழ்க என்று உளமார வாழ்த்துகின்றார்கள்.

தற்காலிக முகவரி:
வேம்படி றோட்,
வேம்படி.

நிரந்தர முகவரி:
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அன்ரா சுமனா.

(C/26262)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

08 - 02 - 1923



30 - 12 - 2002

## அமரர் சித்தர் கதிர்காமு

எமது பாடசாலை ஆசிரியர் திரு.எஸ்.கே.சோதிலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார் **அமரர் சித்தர் கதிர்காமு** அவர்களின் 31ஆம் நினைவுநாளை முன்னிட்டு அன்னாரது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அன்னாரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*ஓம் சாந்தி!*

அதிபர், ஆசிரியர்கள்,
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
வ/வவுனியா தமிழ் ம.ம.வி.,
வவுனியா.

(C/26257)

# ரஷ்யாவில் உயர்கல்வி மருத்துவம், பொறியியல்

**Sri Lanka Medical Council, World Health Organization, British Medical Council** என்பவற்றால் அங்கீகரிக்கப்பட்ட ரஷ்ய பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்க அரிய வாய்ப்பு.

Medicine (MD/M.B.B.S.), Engineering (B.Sc., M.Sc., Ph.D.), Management, Computer துறைகளில் கற்க விரும்புபவர்களுக்கு சிறந்த சந்தர்ப்பம்.

இலங்கையில் பல வைத்தியர்கள், பொறியியலாளர்களை உருவாக்கிய பெருமையைக் கொண்ட இப்பல்கலைக்கழகங்களில் குறைந்த செலவில் தரமான கல்வியை எமது மாணவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இலகு கட்டண தவணைமுறை, சிறந்த பெறுபேறுடையவர்களுக்கு புலமைப் பரிசில் ஏற்பாடு, இலவச தங்குமிட, வைத்திய, நூலக, ஆய்வுகூட வசதிகள், மாணவிகளுக்கு விசேட பயண ஏற்பாடு, தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பல்கலைக்கழகக் கட்டணங்களை ரஷ்யா சென்று செலுத்தும் வசதிகள்.

**Make an appointment with our Official Representative prior to his visit to Jaffna. Selected Students will be given spot admission and they will travel Russia at end of February.**

077 - 7271990, 01 - 678322

**COLLINCO INTERNATIONAL**

*57, Vinayalunkara Mw., Colombo - 10*

(வடக்கிற்கான முகவர்கள் தேவை)

(சி-26259)

## தையல் கண்காட்சியும் விற்பனையும்

வடமராட்சி,ஜன.29

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் நடத்தப்படும் தையல் பயிற்சி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் மடத்தடி - தம்பசிட்டி வீதியிலுள்ள பயிற்சி நிலையத்தில் நாளையும் (வியாழன்), நாளை மறுதினமும் (வெள்ளி) பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு யாழ்.செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திரப்பிள்ளை பிரதம விருந்தினராகவும், இலங்கை வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் சி.நடராஜசிங்கம், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.செல்வரத்தினம், கரவெட்டி பிரதேச செயலர் க.கனகரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ம-173)

## தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தரநியமனம் வழங்குக!

மட்டக்களப்பு,ஜன.29

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளையினர் அரசுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர்.

போர்க்கால நெருக்கடியில் பணியாற்றிய தொண்டர் ஆசிரியர்களை உதாசீனம் செய்து ஒதுக்கிவிடுவது நல்லதல்ல எனவும் -

எனவே, அவ்வாறு பணியாற்றியவர்களின் தகைமை, சேவைக்காலம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு நிரந்தர நியமனம் வழங்குமாறும் -

அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ம-4)

## வலிகாமம் வலய பாடசாலை அதிபர்களுக்கு!

வலிகாமம் தெற்கு,ஜன.29

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடல் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (ம-152)

### அலுவலக பணியாள்(பியோன்) தேவை

எமது அலுவலகத்துக்கு க.பொ.த. சா/தரம் தேர்ச்சி பெற்ற, சுயமாக, சுறுசுறுப்பாக வேலை செய்யக்கூடிய 20 வயதுக்குட்பட்ட பணியாள் (பியோன்) தேவை. நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு: இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்,
இல.844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

### ஓட்டோவும் சாரதியும் தேவை

எமது ஸ்தாபனத்தில் காலை 8 மணிமுதல் இரவு 7 மணிவரை வாடகைக்கு வேலை செய்யக்கூடிய AUTO(Tri - Show)வும் சாரதியும் தேவை. மாதாந்த அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

தொடர்பு: இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்,
இல. 844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

### சமையலாள் தேவை

எமது ஸ்தாபனத்தின் இயக்குநர்களின் வதிவிடத்தைப் பராமரிப்பதற்கும் சமையல் வேலை செய்வதற்கும் அனுபவம் வாய்ந்த சமையலாள் தேவை. மேல் நாட்டவருக்கு ஏற்ப சமையல் செய்யத் தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

*தொடர்பு:-*
இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்,
இல. 844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

### பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை

எமது ஸ்தாபன வளாகத்திலும் இயக்குநர்களின் வதிவிடத்திலுமுள்ள பூந்தோட்டங்களை வடிவமைத்துப் பராமரிப்பதற்கு அனுபவம் வாய்ந்த பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை. அனுபவச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

*தொடர்பு:-*
இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்,
இல. 844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/26254)

# புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்

## வெற்றிடங்கள்

எமது ஸ்தாபனம் பொறியியல்துறையில் கடந்த 25 வருடங்களாக யாழ்.மக்களுக்கு சேவைசெய்து வந்துள்ளது. எமது ஸ்தாபனத்தின் கூட்டமைப்பு இத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து, தெற்காசிய பிராந்தியத்தில் ஒரு முன்னணி நிறுவனமாகத் திகழ்கின்றது. எமது கூட்டமைப்பு, உற்பத்தி செய்யும் இயந்திர சாதனங்களின் சிறந்த தராதரத்தினால் அவற்றுக்கு சர்வதேச சந்தையில் கிராக்கி ஏற்பட்டு, அவை இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், துருக்கி, உக்கிரேன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இப்பொழுது நாம் சர்வதேச தரமுள்ள இயந்திரங்களை யாழ்ப்பாணத்தில் தயாரித்து ஏற்றுமதி செய்யவுள்ளோம். இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எமது அமைப்பில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. கடைச்சல் இயந்திர இயக்குநர்
   (லெத்மன் - Lathe Man)
2. மில்லிங்மெசின் இயக்குநர்
   (Milling Machine Operator)
3. தகட்டு வேலைத் தொழிலாளி
   (Sheet Metal Worker/ Fabricator)

மேற்படி வெற்றிடங்களுக்கு சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றலுள்ள, சுறுசுறுப்பு மிக்க, குறைந்தது 10வருட அனுபவமுள்ள, தரமான, வேலை செய்வதில் ஆர்வமுள்ள தொழிலாளர் தேவை.

நற்சான்றிதழ் விபரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர் விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10.02.2003

நிர்வாக இயக்குநர்,
**புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பெனி லிமிட்டெட்,**
**இல.844, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

(C/26255)

# புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்

## வெற்றிடங்கள்

எமது ஸ்தாபனம் பொறியியல் துறையில் கடந்த 25 வருடங்களாக யாழ்.மக்களுக்கு சேவைசெய்து வந்துள்ளது. எமது ஸ்தாபனத்தின் கூட்டமைப்பு இத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து தெற்காசிய பிராந்தியத்தில் ஒரு முன்னணி நிறுவனமாகத் திகழ்கின்றது. எமது கூட்டமைப்பு, உற்பத்தி செய்யும் இயந்திர சாதனங்களின் சிறந்த தராதரத்தினால் அவற்றுக்கு சர்வதேச சந்தையில் கிராக்கி ஏற்பட்டு, அவை இந்தியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், துருக்கி, உக்கிரேன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இப்பொழுது நாம் சர்வதேச தராதரமுள்ள இயந்திரங்களை யாழ்ப்பாணத்தில் தயாரித்து ஏற்றுமதி செய்யவுள்ளோம். இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எமது அமைப்பில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

★ **Engineering Assistant (Mechanical)**

N.D.T. Mechanical Engineering தேர்ச்சியுடன் தனியார் துறையில் குறைந்தது 5 வருடம் Fabrication workshop இல் வேலைசெய்த அனுபவத்துடன் சுயமாகச் சிந்தித்து செயற்படுபவரும் வேலையாட்களைச் சிறந்தமுறையில் வழிநடத்தும் ஆற்றலுமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ கணக்காளர்
**(Accountant)**

சுயாதீனமாக சகல கணக்குப் புத்தகங்களையும் எழுதி கணக்காய்வுக்கு உட்படுத்தக்கூடிய ஆற்றலுடையவராக இருக்கவேண்டும். முகாமைத்துவத்துக்குத் தேவைப்படும் கணக்குத் தகவல்களைச் சீராகவும், தகுந்த நேரங்களிலும் வழங்கும் ஆற்றல் மிக அவசியமானது. ஆங்கிலத்தில் ஆற்றலுள்ளவர்களுக்கு (Fluency in English) முன்னுரிமை வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் துறையில் தகுதிச் சான்றிதழ்களுடன் 3 வருடத்துக்குக் குறையாத அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

*விண்ணப்ப முடிவு திகதி:* 10.02.2003

நிர்வாக இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்சினியரிங்,
கம்பனி லிமிட்டெட்,
இல. 844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-26256)

# மரண அறிவித்தல்

## திருமதி சுந்தரதேவி கதிர்காமத்தம்பி (மம்மி)

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடாவில் வசித்துவந்தவரும், எல்லோராலும் "மம்மி" என்று அன்பாக அழைக்கப்பட்டவருமான திருமதி சுந்தரதேவி கதிர்காமத்தம்பி அவர்கள் 04.01.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற N.S. கதிர்காமத்தம்பி (Post Master) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - தேவசௌந்தரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவசங்கரநாதன், காலஞ்சென்ற ஞானநாதன், ரட்னநாதன், ராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரகுமாரி (Canada), ஜெயகுமாரி (U.S.A.), தேவகுமாரி (Switzerland), Dr.ரவீந்திரன் (U.S.A.), சுபாஜினி (Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலேந்திரன், ஜெகநாதன், ராஜகுமார், மிருணாளினி, நகுலானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீபா, நிருபா, பிரவீண், கிருஷான், ஜெரிஷான், சிந்தியா, சஞ்ஜெய், மயூரன், ஜெனந்தன், சனந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.01.2003 அன்று கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகள் - இந்திரா பாலா 416 - 286 - 9922,
மகன் - ரவி கதிர்காமத்தம்பி 614 - 834 - 5775.

(C/26258)

# வடக்கில் கண்ணி அகற்ற படையினர் முட்டுக்கட்டை

## மனிதநேயக் கண்ணி அகற்றும் பிரிவின் பணிப்பாளர் தகவல்

கிளிநொச்சி,ஜன.29

வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிக்கு படையினர் முட்டுக்கட்டை விடுத்து வருவதாக மனிதநேயக் கண்ணி வெடி அகற்றும் பிரிவின் பணிப்பாளர் யோகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளிநாட்டு செய்தி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்குடாநாட்டில் சில இடங்களில் கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளைப் புதைத்த வரைபடங்களைக் கொடுப்பதற்கு படையினர் மறுத்து வருகின்றனர்.

இதனால், பல இடங்களில் கண்ணிவெடி அகற்றும் பணியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், தென்மராட்சியின் பல இடங்களில் கண்ணிவெடி அகற்றுவதற்குப் படையினர் நேரடியாகத் தடை விதித்திருக்கின்றனர். இதனால் வன்னியிலிருந்து மீளக்குடியமரச் சென்ற பல மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# எதிர்க்கட்சித் தலைவர் யாழ். சென்றது அரசின் சமாதான முயற்சியால்தான்

## அமைச்சர் அஸ்வர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.29

அரசின் சமாதான முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியே எதிர்க்கட்சிக் குழுவினரின் யாழ்ப்பாண விஜயம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற விவகார அமைச்சர் அஸ்வர். அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் பேசும்போதே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலரும் யாழ்ப்பாணம் சென்றது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

எந்தக் கட்சியினரும் எந்த அணியினரும் நாட்டின் எந்தப் பகுதிகளுக்கும் அச்சமின்றிச் சென்றுவரக்கூடிய ஒரு நிலையை ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஏற்படுத்தியிருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவரும் ஏனையோரும் யாழ்ப்பாணத்தில் மோசமான நிலைமைகளைக் கட்சியின் தலைமைப் பீடத்துக்கு எடுத்து விளக்கி சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவேண்டும் - என்றார். (ம-4)

# மீள்குடியமர்வு தொடர்பாக வலி. மேற்கில் மதிப்பீட்டுப் பணி

வலி.மேற்கு,ஜன.29

மீள்குடியமர்வு தொடர்பாக ஆராய்வதற்கென வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு நியமிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவினருக்கும் அப்பகுதிக் கிராம அலுவலர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் பற்றியும் மக்களின் பிரச்சினைகள் பற்றியும் இக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்களைத் தனித்தனியே சந்தித்துக் கலந்துரையாடி, இக் குழுவினர் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் எவ்வாறு பிரச்சினைகள் உள்ளன என்பதை விரிவாகக் கேட்டறிந்தனர்.

இம்மதிப்பீட்டுக் குழுவில் விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதி கு.சிறில், அரசதரப்புப் பிரதிநிதி கலாநிதி வி.அம்பலவாணர், யு.என்.எச்.சி.ஆர். நிறுவனப் பிரதிநிதி எலிசபெத்குயின் ஆகியோர் அடங்கியுள்ளனர்.(ஜ-8-175)

# தைப்பொங்கலை ஒட்டிய கட்டுரைப் போட்டி முடிவுகள்

வலி.தெற்கு,ஜன.29

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையால் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது.

இப்போட்டியில் பங்குபற்றி பரிசு பெறும் மாணவர் விவரம் வருமாறு:-

**கனிஷ்ட பிரிவு**

**(6ஆம், 7ஆம் தரங்கள்)**

★ க.ஜஸ்மிலா - யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.

★ க.உஷாந்தன் - யாழ்.இந்துக் கல்லூரி.

★ ப.நிமாலின் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

**மத்திய பிரிவு**

**(8ஆம், 9ஆம் தரங்கள்)**

★ நா.சிறீவள்ளி - இணுவில் இந்துக் கல்லூரி.

★ சே.ஜெனார்த்திகா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

★ யோ.மஞ்சு - வீமன்காமம் மத்திய மகா வித்தியாலயம்.

**சிரேஷ்ட பிரிவு**

**(10ஆம், 11ஆம் தரங்கள்)**

★ த.ஜெபவதனி - உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.

★ த.தர்சினி - உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.

★ வ.சிவலோயினி - இணுவில் இந்துக் கல்லூரி. (ஜ-152)

# கனடா உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கல்வி வசதிகள்

கொழும்பு,ஜன.29

கனடாவின் உயர் தொழில்நுட்ப நிறுவனமான 'புறொன்றோ டேற்றா சிஸ்ரம்' என்ற கல்லூரி, தான் வழங்கும் கல்வி வசதி மற்றும் வாய்ப்புக்கள் குறித்து விளக்கமளிக்கும் இலவசக் கருத்தரங்கு ஒன்றை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தியது.

இது தொடர்பாக மேற்படி கல்லூரியின் தலைவர் நாளழ் ராம்ஜீ கடந்த வாரம் கொழும்பில் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கமளித்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-

பிறநாட்டு மாணவர்களின் கல்வி வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு கனடா மிகப்பொருத்தமான தளமாக விளங்குகிறது.

கனடாவின் உயர் தொழில்நுட்ப நிறுவனமான 'புறொன்றோ டேற்றா சிஸ்ரம்ஸின்' ஒரு பிரிவே 'புறொன்றோ டேற்றா' கல்லூரியாகும்.

கடந்த 15 வருடங்களாக றொறன்ரோவில் இயங்கிவரும் சர்வதேசப் பிரபலம் வாய்ந்த முன்னணி கல்வி நிறுவனமாக இது விளங்குகிறது.

இலங்கை மாணவர்களின் உயர் தொழில்நுட்ப கல்வியைக் கருத்திற் கொண்டு, இதன் கிளையொன்று கொழும்பில் மார்ச் மாதம்முதல் இயங்கவுள்ளது. இக்கல்லூரியில் கற்பதற்குத் தகுதியான ஐந்நூறு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான முதற் கட்டப் பணிகளை மேற்கொள்ளவே இலங்கை வந்துள்ளேன்.

எமது கல்லூரி மென்பொருள் தீர்வுகளையும், அதற்கான பயிற்சிகளையும் வழங்கிவருகிறது.

அத்துடன் தகவல் தொழில்நுட்பத்தில் பயிற்சிகளை வழங்குவதற்கு கனடாவில் தனியார், இரண்டாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்து கொண்டுள்ள கல்விசார் பயிற்சி நிறுவனமாக இது திகழ்கிறது.

'புறொன்றோ டேற்றா' கல்லூரியிலிருந்து பெறப்படும் கல்வித்தகைமை, அதன் சான்றிதழ்கள் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கின்றன. மார்ச் மாதம்முதல் கொழும்பில் 'புறொன்றோ டேற்றா' கல்லூரியின் கிளையொன்று நிறுவப்படும். இதன் தலைவராக எஸ்.சிவகாந்தன் செயற்படுவார்.

பயிற்சிநெறி ஒரு வருடகால எல்லையைக் கொண்டதாகும். இந்திய விரிவுரையாளர்கள் ஆங்கிலமொழி மூலம் போதனைகளை மேற்கொள்வர். மூன்று மாதங்கள் இலங்கையிலும் அதனைத் தொடர்ந்து ஒன்பது மாதகால பயிற்சி கனடாவிலும் வழங்கப்படும்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர அல்லது உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள ஐந்நூறு மாணவர்கள் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்படுவர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கையிலும் கனடாவிலும் மேற்கொள்ளப்படும் ஒருவருட தொழில்நுட்பப் பயிற்சிகளுக்கு ஒருவரிடமிருந்து பத்தாயிரம் கனேடியன் டொலர்கள், இலங்கைப் பணத்தில் அறவிடப்படும். விசா செலவுகளும் இதில் அடங்குகின்றன.

இந்தத் தொழில்நுட்பக் கற்கைநெறி தொடர்பான விரிவான தகவல்கள் கருத்தரங்கில் தெரிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்தக் கற்கைநெறி மற்றும் கருத்தரங்கு தொடர்பான விவரங்களை யாழ்ப்பாணத்தில் 021 -222 3083 அல்லது 0777-307841 என்ற தொலைபேசிமூலம் திரு.பூரணச்சந்திரனிடம் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### வலிகாமம் பனை, தென்னைவள சங்க உறுப்பினர்களுக்கு

# ஓய்வு மற்றும் மரண கொடுப்பனவு ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பு

வலி.தெற்கு,ஜன.29

வலிகாமம் பனை - தென்னைவள கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி அதன் கீழ் இயங்கிவரும் ஆறு அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கான ஓய்வு மற்றும் மரணக் கொடைகளை இவ்வருடம் முதல் ஆயிரம் ரூபாவினால் அதிகரிப்பது எனத் தீர்மானித்துள்ளது.

மானிப்பாயில் இயங்கிவரும் மேற்படி கொத்தணியின் விசேட கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொத்தணியின் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான சு.கணேசமூர்த்தி (பனை - தென்னைவளம்), பொ.சிவலிங்கம் (கணக்காய்வு), தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த இ.இலங்கன், தலைமைக் காரியாலயக் கூட்டுறவுப் பரிசோதகர் வி.கே. அருந்தவநாதன், பொதுமுகாமையாளர் மற்றும் பொதுச்சபை பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

"சமுதாய நன்மை கருதி கொத்தணி பல திட்டங்களை முன்வைத்து நடைமுறைப்படுத்துவது பாராட்டத்தக்கது. கொத்தணி தமது உற்பத்திகள் தொடர்பாக ஏனைய பல நிறுவனங்களுடன் போட்டியிட்டு வெற்றியீட்டவேண்டும். சமூக நலன் திட்டங்களை செயற்படுத்தும்போது உடனுக்குடன் அவற்றை நிறைவு செய்ய வேண்டும்" - என்று அங்கு உரையாற்றிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் (கணக்காய்வு) வலியுறுத்திக் கூறினார்.

இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த வந்த ஓய்வுபெறும் அங்கத்தவர்களுக்கும் இயற்கை மரணமடைந்த அங்கத்தவர்களுக்கும் வழங்கி வந்த 5,000 ரூபாவை 6,000 ரூபாவாகவும், விபத்து மரணமடைந்தவர்களுக்கு 6,000 ரூபாவை 7,000 ரூபாவாகவும் இவ்வருடம் முதல் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

★ வடிசாலைக்கென கொள்வனவு செய்யப்படவுள்ள கள்ளுக்கு செறிவுக்கு பத்து சதவீதம் ஒதுக்கீடு செய்து, பண்டிகை காலங்களில் அங்கத்தவர்களுக்கு பங்கிட்டு வழங்குவது.

★ அங்கத்தவர்களினதும் பணியாளர்களதும் பிள்ளைகள், பணியாளர்கள், மகளிர் ஆகியோருக்கு இலவச கணனிப் பயிற்சி வழங்குதல். இதற்கென ஐந்து கணனிகளைக் கொள்வனவு செய்து பயிற்சிநெறியை நடத்துதல்.

★ அங்கத்துவ சங்கங்களால் நடத்தப்பட்டுவரும் முன்பள்ளி மாணவர்களுக்கு வழங்கிவரும் சத்துணவைத் தொடர்ந்து வழங்குவதுடன் அதனை போஷாக்குள்ள மாவாகத் தயாரித்து வழங்கல்.

★ முன்பள்ளி மாணவர்களுக்கு இவ்வருடம் இலவச சீருடைகள் வழங்கல்.

★ அங்கத்துவச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், கொத்தணிப் பணியாளர்கள் போன்றோரின் பிள்ளைகள், 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியடையும்போதும் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் உயர் சித்திகள் பெறும்போதும் பல்கலைக்கழகக் கல்விக்குத் தெரிவுசெய்யப்படும்போதும் அவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி உதவி வழங்குதல்.

★ சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள், கொத்தணிப் பணியாளர்கள் போன்றோருக்கு இலவச மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளுதல், இலவச மூக்குக் கண்ணாடி, மருந்து வகைகள் வழங்கல் -

★ உறுப்பினர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பழமரங்கள் வழங்குதல் -

★ தொழிலின்போது விபத்து மரணமடைந்த அல்லது இயற்கை மரணமடைந்த குடும்பங்களின் மறுவாழ்வுக்காக நிதி வழங்கல் -

★ அங்கத்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் மகளிரும் சுயதொழில் செய்யக்கூடிய வகையில் தையல் பயிற்சி வழங்கல்-

★ அங்கத்தவர்களுக்கான ஓய்வூதிய திட்டம் தயாரித்தல் -

★ நவீன வடிசாலை பொதுத் தொகுதி அமைத்தல். (ஜ-152)



தைப்பொங்கல் தினத்தை ஒட்டி பருத்தித்துறை பொலீஸார், வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சிறுவர், முதியோர்களுக்கான அன்பளிப்புக்களை வழங்கினர். இவ்வைபவத்தில் பருத்தித்துறை தலைமைக் காரியாலய பொலீஸ் இன்ஸ்பெக்டர் கே.சி.ஹப்பு ஆராய்ச்சி சிறுவன் ஒருவனுக்கு அன்பளிப்பு ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசிய ஒருவழக்கில் பழ.நெடுமாறன் விடுதலை!

## திருச்செந்தூர் நீதிமன்றில் தீர்ப்பு

திருச்செந்தூர்,ஜன.29

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்ற வழக்கு ஒன்றிலிருந்து தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

1992ஆம் ஆண்டு தமிழர் மறுமலர்ச்சி மன்றம் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் கலந்துகொண்டு பேசினார்.

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியதாகவும், இந்திய அமைதிப்படை குறித்துப் பேசியதாகவும் திருச்செந்தூர் பொலீஸ் நிலையத்தில் அவருக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

தற்போது 'பொடா' சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு கடலூர் சிறையில் இருக்கும் பழ.நெடுமாறன் இதுவரை 16 முறை திருச்செந்தூர் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த வழக்கை விசாரித்துவரும் நீதிபதி பால்துரை, நேற்றுமுன்தினம் தீர்ப்பை அறிவித்தார். வழக்கில் ஆஜர்ப்படுத்துவதற்காக நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு திருச்செந்தூர் நீதிமன்றுக்கு பழ.நெடுமாறன் கொண்டு வரப்பட்டார்.

பகல் 11.15 மணிக்கு நீதிபதி பால்துரை இந்த வழக்கை விசாரித்து நெடுமாறனை விடுதலை செய்து தீர்ப்புக் கூறினார்.

நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்த நெடுமாறன் 'பொய் வழக்கு முறியடிக்கப்பட்டுள்ளது; உண்மை நிலைநாட்டப்பட்டுள்ளது' என்று கூறினார்.

அதன் பிறகு நெடுமாறன் கடலூர் சிறைக்கு கொண்டுசெல்லப்பட்டார். நெடுமாறன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஒரு வழக்கிலிருந்தே அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ம)

# திருடர்கள் தொல்லை அதிகரிப்பு

அரியாலை,ஜன.29.

கொழும்புத்துறைப் பகுதியில் திருடர்களின் கைவரிசை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் சுவாமியார் வீதிப் பகுதியில் இரவுவேளை வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுவதற்கு எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.

வீட்டுக்காரர்கள் கூக்குரல் இட்டதும் திருடர்கள் தமது முயற்சியைக் கைவிட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், கொழும்புத்துறை கிழக்குப் பகுதி, மின்சார விநியோகம் இன்றி இரவு வேளைகளில் இருளில் மூழ்கியிருப்பதைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையை காட்டி வருவதாகவும் கூறப்பட்டது. (ம-17)

# ஜே.கே. அரங்கள்



இன்ஜினியர்கள் பாவிக்கின்ற, பெறுமதிக்கு

பொருத்தமான ஜே.கே. அரங்கள்

என்று கேட்டு வாங்குங்கள்

ஜெனரல் எக்கியூப்மன்ட்ஸ் லிமிடெட்

316 & 400 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 12.

போன்: 345046, 327264, 343822, 430799

(சி-24331) பக்ஸ் : 434637

TALENT ads


# பாராட்டி வாழ்த்துகிறோம்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினரும் "கலைஞானகேசரி " என்ற அரச விருதினையும் அவரது நூலாக்கத்திற்கான "ஞான பண்டித ஆய்வரசு" விருதினையும், "சைவப்புலவர், பண்ணிசைமணி" எனும் கல்விசார் பட்டங்களையும பெற்ற

சமாதான நீதிவான்



## உயர்திரு. கதிர். தணிகாசலம்

அவர்கள்

*கலாசார அமைச்சினால்*

"கலாபூசணம்" விருது

வழங்கிக் கௌரவிக்கப்பட்டமைக்காக எமது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்து வாழ்த்துகிறோம்.

அவரது கலை, கலாசார சமயத் தொண்டுகள் மேலும் தொடர ஆரோக்கியமான ஆயுளைக் கொடுத்தருள ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

***பழைய மாணவர் சங்கம்,***

***நுண்கலை மன்றம்.***

(c-26263)

# 31ஆம் நாள் நினைவுறுத்தல்

மலர்வு 28 - 01 - 1936



உதிர்வு 30 - 12 - 2002

## திருமதி மீனாட்சி அம்மா கனகசுந்தரம்

(S.N.K. சுந்தரம்)

(புங்குடுதீவு மேற்கு - சப்பல் வீதி, யாழ்ப்பாணம்)

"வாழவைத்த தெய்வமே! - இன்னும்
சிலகாலம் எம்முடன்
வாழ்ந்திருக்கக் கூடாதா?"

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி!*

தகவல்:
திருமதி சுந்தரபவானி அருளானந்தம்.
(ஆசிரியர் - OLR)
*33(61), சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.*

*உங்கள் நினைவுகளைச் சுமந்து நிற்கும்:*
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.** (13822)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 21 - 09 - 1970



விண்ணில் 16 - 12 - 2002

## அமரர் சின்ன[illegible] ரவிச்சந்திரன் *(ரவி)*

இன்று 29. 01. 2003 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மற்றும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரேமலதா (மனைவி)
பிள்ளைகள்:
(விதுஷன், விதுஷனன்)

*3ஆம் கட்டை,*
*ஆனைக்கோட்டை.* (13820)

# செய்திக் கொத்து

## தையல் மனையியல் கண்காட்சிகள்

யாழ்ப்பாணம்,ஜன.29

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் தையல் மனையியல் கண்காட்சி எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

அளவெட்டியில் உள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத் தையல் பயிற்சி நிலையத்தில் இக்கண்காட்சி நடைபெறும்.

இதேவேளை -

கரவெட்டிப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால நடத்தப்படும் தையல் கண்காட்சி இம்மாதம் 31 ஆம் திகதியும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1ஆம் திகதியும காலை 9.30 மணியிலிருந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-8)

## மோ. சைக்கிள் முன் நாய் பாய்ந்து விபத்து

தென்மராட்சி,ஜன.29

நாய் குறுக்கே பாய்ந்ததால் மோட்டார் சைக்கிளில் வந்த சகோதரர்கள் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 6 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றது.

காலையில் பயிற்சியில் ஈடுபட்ட படையினருடன் சென்ற நாயே திடீரென மோட்டார் சைக்கிளுக்கு முன்னால் பாய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு சென்றுகொண்டிருந்த மீசாலையைச் சேர்ந்த சகோதரர்களே காயமடைந்தனர்.

(ஐ-117)

## பிரதம எழுதுநராக நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.செயலகத்தின் புனர்வாழ்வுப் பிரிவின் பிரதம எழுதுவினைஞராக எஸ்.கதிர்காமநாதன், புனர்வாழ்வு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னாள் செயலகக் கணக்கியல் பிரிவின் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றியவராவார்.

(ஐ-8)

## அபிவிருத்திக் குழுக் கூட்டம் பெப்ரவரி முதலாம் திகதி

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இவ்வாண்டுக்கான முதலாவது கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்துக்குரிய வேலைத் திட்டங்கள பரிசீலிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்படவுள்ளன.

இக்கூட்டத்தில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்ப்பாணம மற்றும் கிளிநொச்சி அரசஅதிபர்கள், திட்டப்பணிப்பாளர்கள் ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

கடந்த வருடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட 35 லட்சம் ரூபா நிதி இவ்வருடம் 50 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-8)

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

சுழிபுரம்,ஜன.29

முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறியின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று பண்ணாகம் அண்ணா கலைமன்ற முன்பள்ளியில் காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பொருட் நிறுவன திட்ட முகாமையாளர் எய்றினும் சிறப்பு விருந்தினராக சங்கானை உதவி அரச அதிபர் கே.தர்மராஜாவும் சங்கானைக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்லையாவும் சிறுவர் பாதுகாப்பு நிதிய திட்ட உத்தியோகத்தர் ஏ.யேரின்பநாதனும் கலந்து கொள்வர்.

முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ம-28)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

நயினாதீவு மகாவித்தியாலயத்தில் உப அதிபராகக் கடமையாற்றி, தனது அறுபதாவது அகவையில் ஓய்வுபெறும்

## செல்வி கதிரேசு சிவானந்தி

(B.A.Dip in Ed.)

அவர்களை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருள்பெற்றுச் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*நயினாதீவு -6.* (13821) **- உறவினர்கள்.**

# கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் காரைநகர் வடக்கு உப அலுவலகத்தில் கடமையாற்றும் சக உத்தியோகத்தர்

**திரு.க.கனகரத்தினம்**

அவர்களின் அன்பு மகன்

## செல்வன் க.நந்தகோபால் அவர்கள்

காலமான செய்தி அறிந்து மிகவும் துயரடைகின்றோம். இவரின் இழப்பால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊர்காவற்றுறை பிரதேச சபை,**
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
ஊர்காவற்றுறை.

(C/26261)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 02 - 1931



மறைவு 21 - 01 - 2002

## அமரர் கனகர் கந்தையா

**திதி:29.01.2003**

*அன்புக் கணவராய் பாசமிகு தந்தையாய்*
*எமக்கு நல்வழி காட்டிய அன்புத்தெய்வமே!*
*நீங்கள் மறைந்து ஓர் ஆண்டு சென்றாலும்*
*உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது!*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*உச்சியோடை லேன்,*
*மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.* (13819) **- குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## கணேசபிள்ளை பிறேமதாஸ்

கொக்குவிலைச் சேர்ந்த கணேசபிள்ளை பிறேமதாஸ் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) அவர்கள் 26.01.2003 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசபிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் திரு. திருமதி சிவசம்பு தம்பதியினரின் அன்பு மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் துலக்ஷாவின் பாசமிகு தந்தையாரும் பிரபாகரன், நமேஷ் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2003) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி விக்னேஸ்வரி - பவநேசன்,
(விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்.)

*கல்லூரி வீதி,*
*கொக்குவில்.* (13833)

## திருமதி புவனேஸ்வரி நடராசா (ஈஸ்வரி)

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி நடராசா அவர்கள் நேற்று 28.01.2003 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் வே.கி.நடராசா(கம்பளை V.S.N.) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பிரபல சோதிடர் நம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை ஆகியோரின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான அளவெட்டியைச் சேர்ந்த சின்னட்டியார் - கதிராசி ஆகியோரின அன்பு மருமகளும் புஸ்பராஜலக்சுமி (கனடா), விஜயவேல் குமரன்(கொழும்பு - Mik Industries -Jaffna), கோகுலராஜலக்சுமி (கனடா), அருந்தவராஜலக்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் துரைராஜா (கனடா), இந்திராதேவி (கொழும்பு), பரமேஸ்வரன்(கனடா), நிஸாகரநேசன (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனடாவைச் சேர்ந்த அகன், ஆதவன், இமாலயன், ஈசப்பிரியன், சாத்வீகி, நதீஸ், தீபிகா, வர்சினி, வாமதி, தர்ஷினி, பிரதீப், மற்றும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட யனகன் (St.Peters College - Bambalapitiya) திரிஷா, வித்தியாங்கி (Hindu Ladies College-Wellawatta) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கவீசனின்(கனடா) அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு, வெள்ளவத்தை, W.A.சில்வா மாவத்தையிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து நாளை (30.01.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தகனக் கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*79/2,W.A.சில்வா மாவத்தை,*
*வெள்ளவத்தை, கொழும்பு-6.*
*தொ.பே.இல: 01-505601*
*01-552593*
*வானலை நகல் **Fax:** 01-505601*

தகவல்:
ந.விஜயவேல்குமரன்(மகன்)
E.Mail : VIJA49@PAN.LK
(13823)

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## முக்கிய அறிவித்தல்

2000ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தின் போது 46 வணிகர்களின் பொருள்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்டெடுக்கப்பட்டன. அவற்றுக்குரிய கொடுப்பனவுக்கான முடிவுகள் மேற்கொள்ளப் படவுள்ளது.

இன்று (29.01.2003) காலை 8.30 மணிக்கு மன்றப் பணி மனைக்கு தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகின்றேன்.

(C/26270) *கைத்தொழில் வணிகர் மன்றம், சாவகச்சேரி.*

## சேவையினைப் போற்றுகின்றோம்



ஆறு ஆண்டுகளாக தெல்லிப்பழை பிரதேச செயலராக இருந்து அரும்பெரும் சேவையாற்றி யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபராக பதவி உயர்வு பெற்றுச்சென்றுள்ள

**திருமதி ப.திலகநாயகம்**

அவர்களையும்



நிர்வாக உத்தியோகத்தராக இருந்து உதவிப் பிரதேச செயலராக நியமனம் பெற்ற

**திரு.கா.பீதாம்பரம்**

அவர்களையும் மேலும் பல சிறப்புகள் பெற வாழ்த்துகின்றோம்.

கிராம அலுவலர்கள்,
அளவெட்டி, இளவாலை.

(13830)

## பாராட்டும் வாழ்த்தும்

தென்மராட்சி மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த எமது மண்ணைச் சேர்ந்த

**உயர்திரு க.கேதீஸ்வரன்**

அவர்கள் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு பிரதேச செயலராக நியமிக்கப்பெற்றதையிட்டு அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

கச்சாய் கிராம அபிவிருத்தச் சங்கம்
கச்சாய்.

(C/26267)

**பொலீஸ் திணைக்களத்தினால் நிரந்தர சேவைக்காக உதவிப் பொலீஸ் பரிசோதகர், பொலீஸ் கொஸ்தாப்பில் ஆட்சேர்ப்பிப்பது சம்பந்தமான**

## அறிவித்தல்

1) இது சம்பந்தமாக 2002.12.27 ஆம் திகதி இல:1269 இலங்கை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன்படி விண்ணப்ப முடிவு திகதி 2003.01.31.
2) விண்ணப்பிப்பதற்கு விரும்பும் எவரும் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(C/26268)

## துயர் பகிர்கிறோம்

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலய ஆசிரியை திருமதி ஜெ.வரதராஜா அவர்களின் அன்புத் தந்தையாரான

**சண்முகம் செல்லத்துரை**

அவர்களை 25.01.2003 அன்று காலன் அழைத்த செய்தி அறிந்து கவலை அடைகிறோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர், பெற்றோர்கள்.

(13827)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி

தோற்றம் 02 - 09 - 1919



மறைவு 29 - 12 - 2002

*பிரபல சமூகசேவையாளனும் ஏ.எம்.ரி. நிறுவன உரிமையாளருமான*

**திரு. அ.மு.தனநாயகம்**

அவர்களது அன்புத் தந்தையார்

**அப்பாக்குட்டி முருகேசு**

அவர்கள் காலமாகி 31ஆவது நாள் நினைவஞ்சலியைச் செலுத்தும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

*கோப்பாய் தெற்கு இருபாலை கற்பகவிநாயகர் ஆலய திருப்பணிச் சபையினர்.*

(13831)

## 'அங்குசம்' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.29

'அங்குசம்' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

'கிராமத்துக் குயில்' ஓவியர் கு. றஜிபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராஜதுரை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஐ-3)

## பிரதேச செயலருக்கு பிரியாவிடை

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் நடத்தும் பிரிவுபசார விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலராக வலிகாமம் வடக்கில் கடந்த ஆறு ஆண்டுகள் பணியாற்றி யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவியுயர்வு பெற்றுள்ள திருமதி ப.திலகநாயகத்தைக் கௌரவிக்கும் முகமாகவே இப்பிரிவுபசார விழா இடம்பெறுகிறது. (ஐ-10)

## நாவலர் மணி மண்டபத்தில் யோகப் பயிற்சி

யோகப் பயிற்சி, தியானப் பயிற்சி ஆகியவற்றின் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய அலுவலகத்தினால் யோக, தியானப் பயிற்சி வகுப்புகள் நாவலர் மணி மண்டபத்தில் விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

இந்தியாவின் பெங்களூர் நகரில் உள்ள யோக கேந்திராவில் பயிற்சி பெற்ற ஆசான் நமசிவாயம் சிவனேஸ்வரராயா (சிவா) பயிற்சியினை நடத்துவார்.

திங்கள் செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் மாலை 5.30 மணிமுதல் 7.00மணிவரை பயிற்சி வகுப்புகள் நடைபெறும். பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்கள் பெயர்களை நாவலர் மண்டபத்தில் உள்ள அமைச்சின் அலுவலர்களிடம் பதிவுசெய்து கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாடசாலைகளில் தேசிய கீதம்

சகல பாடசாலை நாள்களிலும் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன் தேசிய கீதம் பாடப்பட வேண்டும். கல்வி, கலாசார, மனிதவள அமைச்சின் செயலாளர் வி.கே.நாணயக்கார பாடசாலைத் தலைவர்களுக்கு அனுப்பியிருக்கும் சுற்றறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படும் 55ஆவது சுதந்திரதினத்தின் பின்னர் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டுமெனவும் சுற்றறிகையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**வகுப்புகள் [பிரத்தியேகம்]**

புவியியல், சூழலியல், G.A.Q, B.A Part I,II, III; கணனி செய்முறைப் பயிற்சி வகுப்புகள் மற்றும் A/L, Paper Classes ஆரம்பமாகின்றன.

தொடர்பு: E-MAIL rspillain@yahoo.com

**R.S.PILLAI**

B.A (HONS) in Geo.

38/10 மருதடி ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்.

(13832)

**ராஜா** யாழ்ப்பாணம்.



காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நிறஞ்சனாஸ்** சங்கானை



குணால், லோறன்ஸ், தாமு, வையாபுரி நடிக்க

**அற்புதம்** (ரீஸ்ஸ்)

கா.நே : 11.00,2.45,6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மட்டும்

**TOMB RAIDER** (c-26093)

**நாகம்ஸ்** சுன்னாகம்.



சூர்யா, ஜோதிகா, நடித்த

**உயிரிலே கலந்தது** (ரீமேஸ்)

காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 6.30 (பு.நேரம்)

31.01.2003 முதல்

நெஞ்சினிலே

(13813)

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் செல்லத்துரை

*(ஓய்வுபெற்ற சுகாதார ஊழியர்)*

வறுத்தலைவிளான், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுவில், முருகமூர்த்தி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் செல்லத்துரை 25.01.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், பாக்கியநாதன் (பிரான்ஸ்), செல்வராணி, ஜெயராணி (ஆசிரியை, முத்துத்தம்பி ம.வி.), செல்வேந்திரன் (லண்டன்), புஷ்பராணி (பிரான்ஸ்), பாக்கியராணி (பிரான்ஸ்), தனுஷன் (ஆஸ்திரேலியா), அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புஷ்பவதி (பிரான்ஸ்), தியாகராஜா (Nisol Corrugated Cartons LTD, Ekala, Ja - Ela), வரதராஜா, ரஜனி (லண்டன்), ஜெயதாசன் (பிரான்ஸ்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்), சந்திரப்பிரியா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுஷா, வினோத், லஜித், ரகுராம், ரம்மியா, லவண்யா, செல்சியா, சர்மியா, கீர்த்தனா, கவினியா, நிக்ஷன், டிலக்ஷன், தர்யுன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*126/3, கோவில் வீதி.*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (13829)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்

## சுப்பிரமணியம் இரத்தினேஸ்வரன்

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் வவுனியா, தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினேஸ்வரன் 18.01.2003 அன்று ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னார் அமரர் சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், ராசலக்ஷ்மி, உருத்திரன் (பிரான்ஸ்), ராசன் (வவுனியா), ஞானம் (வவுனியா), புஷ்பா (வவுனியா), கண்ணன் (வவுனியா), நிமலன் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2003) புதன்கிழமை பி.ப.4.30 மணியளவில் ஜேர்மனியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யாழ்ப்பாணம்.* (13834)

தகவல்:
பாலசுந்தரம் (துரை).

## வேலன் சின்னத்தம்பி

மணற்பகுதி, புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் சின்னத்தம்பி நேற்று (28.01.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன் - பொன்னம்மா தம்பதிகளின் மகனும் மனோண்மணியின் அன்புக் கணவரும் யோகராசா (மிதிலா அழகு மாடம், ஆவரங்கால்), யோகானந்தம், ஜெகசோதி, யோகதாஸ் (சுவிஸ்), யோகமலர், சுதேஸ்குமார் (சுவிஸ்), சுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேஸ்வரி, கோமதி, பவளராசா, தெனா, அரசரத்தினம், சிவகுமாரி, ராகுலன் ஆகியோரின் மாமனாரும் மைதிலி, அகல்யா, மிதிலா, பார்த்தீபன், துவாரகன், கயல்விழி, நிவேதா, யாதவன், சுவர்ணா, • நிவேதன், மைத்திரேஜி, கௌசிகன், சங்கீதன் சஞ்சயன், துஷ்யந்தன், இலக்கியா, அபிநயா, உதயச்சந்திரன், ஜெயராம் ஆகியோரின் அன்புப் பேரனும் றதீபன், அபிஷா, தில்ஷான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2003) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை கௌடுதூ இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*மணற்பகுதி,*
*புத்தூர்* (13836)

தகவல்:
சி.யோகராசா (மகன்)

## வீரகத்தி சண்முகசுந்தரம்

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி சண்முகசுந்தரம் (Brook Band) 27.01.2003 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் புஷ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வீரகத்தி - சின்னப்பிள்ளையின் சிரேஷ்ட மகனும் தம்பு சின்னத்துரை (Banker)யின் மருமகனும், கலாயினி (U.K) சரவணபவன் (France), மாலினி (France) ஆகியோரின் அன்புத் தந்தையும் குகசீலன் (VET HOSPITAL - PEREDENIYA), சுகன்யா (FRANCE), குருபரன் (FRANCE) அகியோரின் அன்பு மாமனாரும் பிரணவன் (U.K), சதீஸ், சந்துரு, சுந்தர் (FRANCE), வைசாலினி (FRANCE) ஆகியோரின் பேரனும் சிவபாக்கியம் (U.K), நடராஜா, சண்முகராசா (CANADA), கனகம்மா (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் கணேசமூர்த்தி இந்திரா, கமலா, தர்மராஜா சகுந்தலாதேவி, திருச்செந்தூர்நாதன், கமலநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2003) வியாழக்கிழமை காலை 10மணிக்கு அவரது உறவினர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'தேவி மஹால்',*
*கண்ணகி அம்மன் வீதி,*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.* (13838)

தகவல்:
புஷ்பராணி (மனைவி)

## செல்வன்

## தவராஜசிங்கம் தினேசராஜ்

குளங்கரை ஒழுங்கை, கோண்டாவிலைச் சேர்ந்த செல்வன் தவராஜசிங்கம் தினேசராஜ் நேற்று (28.01.2003) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தவராஜசிங்கம் மற்றும் கனகேந்திரராணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் தர்சினி, அனுஷராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (சுதுமலை) மற்றும் பாலம்மா, கார்த்திகேசு, காலஞ்சென்ற சின்னம்மா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2003) புதன்கிழமை பி.ப. 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளங்கரை ஒழுங்கை,*
*அம்மன் கோவிலடி,*
*கோண்டாவில்.* (13840)

தகவல்:
கா.மகாலிங்கம்
(ஆய்வுகூட உத்தியோகத்தர்,
யாழ்.இந்துக் கல்லூரி)

# சில அரசியல்வாதிகளும் இராணுவத்தினரும் புலிகளை யுத்தத்துக்கு அழைக்க முனைகின்றனர்

## புலிகள் தளபதி ரமேஸ் குற்றச்சாட்டு

சிங்கள மக்கள் சமாதானத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அதற்காக உழைக்கின்றனர். ஆனால், சில சிங்கள அரசியல்வாதிகளும், இராணுவத்தினரும் எம்மை மீண்டும் யுத்தத்திற்கு அழைக்க முனைகின்றனர் என புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் விசேட தளபதி ரமேஸ் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலையில் 87 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட 86 பொது மக்களின் ஞாபகார்த்தமாக நேற்று மகிழடித்தீவில் நினைவுத் தூபி ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரமேஸ் இவ்வாறு தெரிவித்தார்.

கவிஞர் தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புலிகளின் மாவடி முன்மாரிக் கோட்ட பொறுப்பாளர் சச்சு மாஸ்டர், தளபதி நாகேஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தளபதி ரமேஸ் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள அரசும், இராணுவத்தினரும் எம்மை மீண்டும் ஒரு போருக்கு அழைக்காமல் இருக்க வேண்டும். அரசியல் ரீதியான தீர்வொன்றை பேச்சு மூலம் பெறவேண்டுமென எமது தேசியத் தலைவர் விழிப்புடன் செயற்படுகின்றார். ஆனால், அத்தீர்வை அரசு தரமறுத்தால் மீண்டும் ஒரு யுத்தத்தின் மூலம் எமது விடியலைப பெற்றுக்கொள்வதற்கு நாம் ஒரு போதும் தயங்கப்போவதில்லை.

வடக்கு - கிழக்குப் பிரதேசம் தமிழரின் தாயகப் பூமி, நாங்கள் சிங்கள மண்ணில் சென்று இராணுவத்துடன் போராடவில்லை. எமது தாயகப் பூமியை ஆக்கிரமித்த இராணுவத்துடனேயே போரிட்டோம்.

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் எம்மை மீண்டும் யுத்தத்திற்கு அழைக்க முனைகின்றனர். உதாரணமாக மட்டக்களப்பில் உள்ள எமது பதாகையை அகற்றினர். தமிழர் தாயகப் பிரதேசத்தில் எந்த ஒரு பதாகையைப் போடவும், தோரணம் போடவும் மக்களுக்கு உரிமையுண்டு.

மீண்டும் ஒரு சண்டை வந்தால் படையினர் பாரிய இழப்பைச் சந்திக்க நேரிடும். இதற்கு எம்மை யுத்தத்திற்கு அழைக்கின்றவர்களே பொறுப்பு - இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ-3)

## இந்தியாவின் வேவு விமானத்தை பாக்.வீழ்த்தியது!

இஸ்லாமாபாத்,ஜன.29

இந்தியாவின் வேவு விமானம் ஒன்றை தனது படைகள் சுட்டு வீழ்த்தியிருப்பதாக் பாகிஸ்தான் அறிவித்திருக்கிறது.

காஷ்மீரில் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மீது பறந்து நோட்டமிட்ட இரண்டு வேவு விமானங்களில் ஒன்றையே சுட்டு வீழ்த்தியிருப்பதாக பாகிஸ்தான் இராணுவத்தின்அறிக்கை தெரிவித்தது.

இச் சம்பவம் தொடர்பாக இந்தியா கருத்து எதனையும் வெளியிடவில்லை. (ஐ)

மட்டக்களப்பு பிள்ளையாரடிப் பகுதியில் பொலிஸாரால் பிடுங்கிச் செல்லப்பட்டு பின்னர் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் மீண்டும் அதே இடத்தில் நிறுவப்பட்ட விடுதலைப் புலிகளின் வரவேற்புப் பலகையையே கீழே உள்ள படத்தில் காண்கிறீகள்.

(செய்தி 2ஆம் பக்கத்தில்)



# வெளிச் சக்திகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகமும் பகிடிவதைக்கெதிராக தீர்மானத்தை வெளியிட்டு துணிவுடன் நடவடிக்கை எடுக்க முன்நிற்பது, முற போக்கான, ஆரோக்கியமான முன்னுதாரணமான செயற்பாடாகும். அதே நேரம் சமூகஅநீதி நடைபெறும் போது அதனைத் தட்டிக்கேட்பது பத்திரிகைகளுக்கும் சமூக அக்கறை கொண்ட அனைவருக்கும் உள்ள கடமையும் உரிமையும் ஆகும்.

இதேவேளை, பத்திரிகைகள் செய்திகளின் உண்மைத்தன்மைகளை சந்தேகத்துக்கு இடமின்றி உறுதி செய்து கொள்வதும், ஆதாரப்படுத்தக் கூடியதாக வெளிப்படுத்துவதும் எதிர்காலத்தில் முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கும் சமூக அநீதிகளை கட்டுப்படுத்துவதற்கும் சாலப் பொருத்தமானதாக அமையும் என நாம் கருதுகிறோம்.

சமூக அநீதிகளை நாம் கண்மூடி மௌனிகளாக நின்று அனுமதிக்கப் போவதில்லை. அவற்றை எமது சமூகத்தில் இருந்து விரட்டியடிக்க நடைமுறைச்சாத்தியமான, செயற்திறன் மிக்க கலந்துரையாடல்களையும், கருத்துப் பரிமாற்றங்களையும் மேற்கொண்டு பிரச்சினைகளை எதிர்காலத்தில் தீர்க்க முனைவது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

தமிழினம் பெரும் விலை கொடுத்து தனது விடுதலைப் பயணத்தில் வீச்சுடனும் உறுதியுடனும் நிதானமாக முன்னேறிவரும் இச்சூழலில் அனைவரும ஒன்றுபட்டு எமது தேசத்தினதும் எமது இனத்தினதும் எதிர்காலத்தினை தீர்மானிக்கும் விடுதலைப்பயணத்தில் இணைந்து பலம் சேர்க்க வேண்டும். அதேநேரம் நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிற்கவேண்டிய இக்கட்டத்தில் எமது இனத்தினைப் பலவீனப் படுத்த முனையும் பிரித்தாளும் தந்திரோபாய உத்திகளைக் கொண்டிருக்கும் சக்திகளுக்கு இடம் கொடாமல் சமூக நீதியும் மனித நேயமும் கொண்ட சமூகத்தினை உருவாக்கும் பணியில் ஒன்றிணைந்து செயற்படுவோம் எனக் கேட்டுக்கொள்கிறோம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

***ஆசிரிய குறிப்பு:-***

1. ஆசிரிய குறிப்பேதும் இன்றி இந்த அறிக்கை பிரசுரமாக வேண்டும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டதால் இது பிரசுரமாவதில் தாமதம் ஏற்பட்டது.

2. மேற்படி பொது மகனின் கடிதம்பற்றிய விவகாரம் குறித்து உதயனின் நிலைப்பாடு தெளிவாக - திட்டவட்டமாக - முன்னரே பல தடவைகள் தெரியப்படுத்தப்பட்டு விட்டதால் அவை குறித்து மீண்டும் இங்கு பிரஸ்தாபிப்பது முற்றாக தவிர்க்கப்படுகிறது.

3. இந்த அறிக்கையின் முதல் பந்தியிலேயே சம்பந்தப்பட்ட விடயம 'வாசகர் கடிதம்' எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலுள்ள கருத்து, தகவல் பொதுமகனுடையதாகவே பிரசுரமாகியிருந்தது. உதயனுடையதாக அல்ல.

எனவே "செய்திகளின் உண்மைத் தன்மை சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்துவது" என்பது வாசகர் கடிதம் விடயத்திற்கு பொருந்துமா? செய்திவேறு; வாசகர்கடிதம் வேறு.

4. பகிடிவதை ஒரு சமூக அநீதி. அதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. இத்தகைய சமூக அநீதிகளை கண்மூடி மௌனியாக நின்று அனுமதிக்கப் போவதில்லை என்று புலிகள் - தமிழரின் ஏக பிரதிநிதிகள் - திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார்கள். இனிமேல் இந்த சமூக அநீதி இந்த மண்ணில் தொடராது இருப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பை இந்த அறிக்கை ஊடாக அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

வெள்ளைத் தாளில் வெறும் அறிக்கை விட்டு விட்டு அதை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யாமல் கண்மூடி இருப்பவர்களல்லர் அவர்கள். பேச்சில் ஒன்றும் செயலில் ஒன்றும் செய்பவர்களும் அல்லர் அவர்கள்.

எனவே, இனிமேல் இந்த மண்ணில மக்கள் உணரக்கூடியதாக - அறியக் கூடியதாக - "எந்த வடிவத்தில் பகிடிவதை தொடர்ந்தாலும் குற்றச்சாட்டு விரல் புலிகள் பக்கமும் திரும்பும் என்பதை நாம் மறந்த விட முடியாது. இதன் காரணமாக பகிடிவதை என்ற சமூகச்சீரழிவு நமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருப்பது மகிழ்விற்குரியது.

என்றாலும் மனவருத்தத்திற்குரிய இரண்டு விடயங்கள் உள்ளன.

*ஒன்று:-* 'ராகிங்' என்பது கள்ளச் சாராயம் காய்ச்சும் சமூகச் சீர்கேடு அல்ல. நாளைய புத்திஜீவிகளாக வரப்போகின்ற இன்றைய உயர்நிலை மாணவர்கள் மத்தியில் வேரோடியுள்ள வேறுவகை சீரழிவு அது. அதனை போராளிகளின் அறிக்கை மூலம்தான் கட்டுப்படுத்தினோம். சமூக விழிப்புணர்வு மூலம் அல்ல என்பது நமது சமூகத்துக்கு பெருமைக்குரியதல்ல.

*இரண்டு:-* ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்த புலிகளின் இந்த அறிக்கையை உதயனைக் குறிவைக்கும் கணையாக சில ஊடகங்கள் தவறாக பயன்படுத்த முயன்றமை.

(ஆ-ர்)

## மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமயம் ஆறு படகுகளில் வந்த சிங்கள மீனவர்கள் இவ்விரு மீனவர்களையும் தாக்கினர் என்று முறையிடப்பட்டிருக்கிறது.

மீனவர்களை கடுமையாகத் தாக்கிவிட்டு அவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் அவர்கள் அபகரித்துச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது.

படுகாயமடைந்த கனகலிங்கம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ஐ-3)


**CHEMISTRY CENTRE**

**A/L 2005**

**Mon., Fri.**

**CHE. - 3 - 4 p.m.**
**PHY. - 4 - 5 p.m.**
**C.MATHS - 5 - 6 p.m.**
**BIOLOGY - 5 - 6 p.m.** (4709)

சிவமயம்

**ஜோதிடம்**

**இந்திய பரம்பரை, சாஸ்திரியார்**

**அருள்வாக்கு அம்பிகா அம்மா**

அவர்கள் முதல்முறையாக யாழ்.மாநகருக்கு வருகைதந்துள்ளார்கள். கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும். ஜாதகம் எழுதிக்கொடுக்கப்படும். மற்றும் எந்தப்பிரச்சினைகள் ஆனாலும் ஜோதிட ரீதியாகச் சரிசெய்யப்படும்.

தொடர்புகளுக்கு:

**அருள்வாக்கு அம்பிகா அம்மா**

**மடோனா லொட்ஜ்**

(லிங்கன் கிறீம் ஹவுஸ், ஸ்ரீமுருகன் ஜுவலர்ஸ் அருகில்)

**121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

குறிப்பு: ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை பார்க்கப்படும். (13817)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

**LECTURES By:-**

MR.M.A.HARI

**புதிய பிரிவு ஆரம்பம்**

**01.02.2003 சனி மாலை 6 மணி**

SAT, SUN } 6p.m. - 7p.m.

**HARY'S INSTITUTE**

NO. 564, கஸ்தூரியார் வீதி,

(யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில)

யாழ்ப்பாணம். (13824)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மாணிக்கம் சுப்பிரமணியம்

*(வாரிவளவு, காரைநகர்)*

வாரிவளவு, காரைநகரை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சுப்பிரமணியம் மாணிக்கம் நேற்று (28.01.2003) செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் அமரர் இளையதம்பி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, சோமசுந்தரம்,.செல்வரத்தினம் (உரிமையாளர்கள், இ.சுப்பிரமணியம் அன்கோ, பிள்ளையார் சைக்கிள் பலஸ், சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாதன் (பட்டுமாமா), சௌந்தராம்பாள், நிர்மலா ஆகியோரின் மாமியாரும் கணேஸ்வரி (ஆசிரியை), யோகேஸ்வரன் (கணக்காளர்-கொழும்பு), விக்கினேஸ்வரி (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), கணேசநாதன் (பல்கலைக்கழகம், கனடா), கமலநாதன் (மாவீரன்), கமலோஜினி (மருத்துவப் பிரிவு), கருணைகுலரட்ணம் (மருத்துவப் பிரிவு), கமலச்சந்திரன் (யாழ்.பல்கலைக்கழகம்), காயத்திரி (தொழில் நுட்பக் கல்லூரி), தர்ஷினி, நிசாந்தி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மயூரதி (யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் பிரியாணி, இசைப்பிரியன் ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2003) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக .காரைநகர் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*வாரிவளவு,* சு.சோமசுந்தரம் (மகன்)
*காரைநகர்.* (C/26273) (மணியண்ணை)

## கந்தையா ஆறுமுகம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் நேற்று (28.01.2003) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா (மாணிக்கப்பிள்ளையார்) - தங்கரத்தினம் ஆகியோரின் மகனும், இராசரத்தினம், இராசையா, கமலேஸ்வரி, கனகாம்பிகை, இந்திராணி, சிவலிங்கம் ஆகியோரின் சகோதரரும் விக்னேஸ்வரி (பிரான்ஸ்), சுமதி, சுரேந்திரன் (பிரான்ஸ்), லக்சுமி, சுகந்தன், சுதர்ஸன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரராஜா (பிரான்ஸ்), நாகேஸ்வரன், செல்வகுமார் (டுபாய்) ஆகியோரின் மாமனாரும் மகிந்தன் (பிரான்ஸ்), மகிழன் (பிரான்ஸ்), மதுரசன் (பிரான்ஸ்), கிருபாகரன், தினேஸ்கரன், கிரிஜா, சுதா, சாயிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2003) புதன்கிழமை மாலை 3.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில், கட்டை ஆலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*செல்வநாயகம் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,* கு.இந்திரகுமார்
*கோண்டாவில்.* (13841) (மருமகன் - குமார்)

## ஆறுமுகம் தங்கராசா

முகமாலையை வசிப்பிடமாகவும் உடுப்பிட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தங்கராசா அவர்கள் நேற்று (28.01.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திலகபூபதியின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரன், கணேசலிங்கம், யோகேஸ்வரன், தர்ஷினி, காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2003) புதன்கிழமை 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் உடுப்பிட்டி வல்லை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:* தகவல்:
*15ஆம் கட்டை,* மனைவி, பிள்ளைகள்,
*உடுப்பிட்டி.* (C/26272) சகோதரர் (அ.தியாகராசா).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக போர் எதிர்ப்பாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது இஸ்ரேலிய தேசியக் கொடி தீ மூட்டி எரிக்கப்படுவதை ஈராக்கியர் ஒருவர் பார்ப்பதைப் படத்தில் காணலாம்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் பங்களாதேஷில் ஆரம்பம்

## வன்முறையில் பொலீஸார் பலி!

டாக்கா,ஜன.29

பங்களாதேஷில் உள்ளூராட்சித் தேர்தல் திங்கட்கிழமை தொடங்கியது. தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிளான முஹமது ஷாஹிதுல் ஹக், சனிக்கிழமை வன்முறையாளர்களால் குத்திக் கொல்லப்பட்டார்.

18 மாவட்டங்களில் உள்ள 83 உள்ளூராட்சி அமைப்புகளுக்கு ஒரு லட்சத்து 98 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் 42 ஆயிரத்து 250 பேர் பெண்கள். உள்ளாட்சி அமைப்புக்களில் 2 ஆயிரத்து 684 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மார்ச் 16ஆம் திகதி வரை இந்தத் தேர்தல் கட்டம் கட்டமாக நடைபெறும். உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 2லட்சம் பேர் தேர்தல் பார்வையாளர்களாக செயறபட்டு வருகின்றனர்.

போக்ரா மாவட்டத்தில் அரசியல் கட்சிகளின் தொண்டர்களிடையே ஏற்பட்ட கோஷ்டிமோதலில் 100 பேர் காயமடைந்தனர். அங்கு அமைதியை நிலைநாட்ட படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நவகாளி மாவட்டத்தில் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிளான முஹமது ஷாஹிதுல் ஹக்கை வன்முறைக் கும்பல் படுகொலை செய்தது.

இவரையும் சேர்த்து தேர்தல் தொடர்பான வன்முறையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்தது. (ம)

## பாகிஸ்தானில் அமெரிக்க தளபதி

இஸ்லாமபாத்,ஜன.29

அமெரிக்க இராணுவத்தின் தளபதிகளில் ஒருவரான ஜெனரல் டாம்மி பிராங்க்ஸ், பாகிஸ்தான் வந்துள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புடன் அவர் பேச்சு நடத்துவார். அவருடன் 8 அதிகாரிகளும் வந்துள்ளனர். பாகிஸ்தானின் இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் காதீர் ஹசன் கான் மற்றும் சில அதிகாரிகள் அமெரிக்க இராணுவ அதிகாரிகளுடன் ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேசினர். (ம)

# பிரிட்டிஷ் போர்க் கப்பல் சைபிரஸ் வந்துசேர்ந்தது

நிகோசியா,ஜன.29

பிரிட்டிஷ் கடற்படையின் மிகப் பெரிய போர்க்கப்பல் சைபிரஸ் நாட்டுக்கு திங்கட்கிழமை வந்துசேர்ந்தது.

ஈராக் மீதான தாக்குதலில் பங்கேற்க இக்கப்பல் சைபிரஸ் கடலில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

கடற்படைக்குத் தேவையான போர்த் தளபாடங்களை ஏற்றிக் கொண்டு இரு கப்பல்கள் ஏற்கனவே சைபிரஸ் வந்துசேர்ந்துள்ளன. எஞ்சிய கப்பல்கள் திங்கட்கிழமை பிற்பகல் சைபிரஸ் வந்துசேர்ந்தன என பிரிட்டிஷ் கடற்படையின் செய்தித் தொடர்பாளர் ராப் நீட் தெரிவித்தார். (ம)

# கெமரூன் நாட்டு வீதியில் பஸ்கள் மோதி கோரவிபத்து!

## 70இற்கும் மேற்பட்டோர் பலி!!

ஜவுண்டோ,ஜன.29

ஆபிரிக்க நாடான கெமரூனில் இரு பயணிகள் பஸ்கள் விபத்துக்குள்ளானதில் 70இற்கும் மேற்பட்டோர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

டாவாலா நகரில் இருந்து தலைநகர் ஜவுண்டே நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றும் நேர் எதிரே வந்துகொண்டிருந்த பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. லொறி ஒன்றினை முந்திச் செல்ல முற்பட்ட பஸ்ஸினாலேயே விபத்து ஏற்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

பஸ்கள் இரண்டும் மிக வேகமாக மோதிக்கொண்டதில் உயிரிழந்தவர்கள் பலரின் சடலங்கள் உருக்குலைந்துள்ளன. சிலவற்றில் தலைகளே இருக்கவில்லை என்று டாக்டர்கள் தெரிவித்தனர். பல சடலங்களில் அங்கங்கள் துண்டாடப்பட்டிருந்ததாகவும் அவர்கள் கூறினர்.

விபத்து நடந்தபோது இரு பஸ்களிலும் 100 பயணிகள் இருந்தனர். பெரிய பஸ்ஸில் 70 பயணிகளும் சிறிய பஸ்ஸில் 30 பயணிகளும் அடங்கியிருந்தனர் என்று அதிகாரிகள் கூறினர். சிறிய பஸ்ஸில் இருந்த பயணிகள் அனைவரும் கொல்லப்பட்டனர். மற்றையதில் உயிரிழந்தவர்கள் போக ஏனையவர்கள் மோசமான காயங்களுக்கு உள்ளாகினர்.

சாரதிகளின் கவனக்குறைவே இந்த விபத்து இடம்பெறக் காரணம் என்று, விபத்து நடந்த இடத்தை நேரில் சென்று பார்த்த பின்னர் பேசிய போக்குவரத்துத்துறை அமைச்சர் கூறினார்.

கடந்த வாரமும் இதே வீதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் 3 பிரெஞ்சுப் படையினர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

உலக அரங்கில்

# அதிசயம் ஏதும் நிகழ்ந்தால்தான் ஈராக் போரை நிறுத்தமுடியும்

## ஜோர்தான் மன்னர் கூறுகிறார்

அமான்,ஜன.29

ஏதேனும் ஓர் அதிசயம் நிகழ்ந்தால்தான் ஈராக் மீதான அமெரிக்கப் போரைத் தடுத்துநிறுத்தமுடியும் என்று ஜோர்தான் மன்னர் அப்துல்லா கூறியுள்ளார்.

சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் தொடங்கிய உலகப் பொருளியல் கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அப்போது அவர் இப்படிக் கூறினார்.

ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு உலக நாடுகளின் ஆதரவைப் பெறமுடியவில்லை என்றால் அமெரிக்கா தனித்து போரிடும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கூறிய சில மணி நேரங்களுக்குப் பின்னர் ஜோர்தான் மன்னர் இவ்வாறு கூறியுள்ளார்.

பக்தாத்தில் ஆயுத சோதனையில் ஈடுபட்டிருக்கும் ஐ.நா.குழுவினர் விரும்பப்பட்டால் அவர்களுக்கு கூடுதல் கால அவகாசம் கொடுக்கப்படவேண்டும் என்றும் -

ஈராக் மீது போர் தொடுக்கப்படுவதாக இருந்தால் அதற்கு முன்பு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் புதிய தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் - ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு கொள்கைப் பிரிவின் தலைவர் ஜேவியர் சொலானா கூறினார்.

பக்தாத்தில் ஆயுத சோதனை இன்னும் சில மாதங்களுக்கு நீடிக்க வேண்டும் என்று பிரெஞ்சு அமைச்சரும் கூறியுள்ளார். (ம)

# வெளிநாடுகளிலுள்ள பிரஜைகளை உஷார்ப்படுத்துகிறது அமெரிக்கா

ஈராக் மீது போர் தொடங்கும் சூழல் அதிகரித்து வருவதால் வெளிநாடுகளில் வாழும் அமெரிக்கர்கள் எந்த நெருக்கடியையும் சந்திக்கும் வகையில் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா உஷார்ப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் திணைக்களம் விடுத்துள்ள அவசர அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

ஈராக் மீது போர் மூளக்கூடும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் வெளிநாட்டில் வாழும் அமெரிக்கர்களிடம் தேவையில்லாமல் பீதியை ஏற்படுத்த அமெரிக்க அரசு விரும்பவில்லை. என்றாலும்கூட அவசரகால நடவடிக்கைக்கு அவர்களைத் தயார் செய்யவேண்டியது எங்கள் கடமை. எனவே வெளிநாட்டில் வாழும் அமெரிக்க குடிமக்கள் கீழ்க்கண்ட முன் எச்சரிக்கை நடவடிக்கையில் உடனடியாக ஈடுபடவேண்டும்.

போர்க்காலத்தில் வெளிநாடுகளில் வன்முறைகள், தீவிரவாதம், அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடக்கலாம். அவற்றை எதிர்கொள்ள உஷார் நிலையில் இருக்கவேண்டும்.

முதலில் கவனிக்கவேண்டியது உங்கள் பாஸ்போர்ட், பிறந்த திகதி மற்றும் திருமண ஆவணங்கள், தடுப்பூசி போன்ற மருத்துவ அறிக்கைகள், காப்புறுதி, வங்கிப் பதிவுகள் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து, எளிதில் எடுக்கக்கூடிய இடத்தில் தயார் நிலையில் வைத்திருப்பது அவசியம்.

தாங்கள் வசிக்கும் வீட்டின் முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை அமெரிக்க தூதரகத்தில் பதிவு செய்யவேண்டும்.

வீட்டில் அத்தியாவசிய பொருள்கள் அனைத்தும் தட்டுப்பாடு இல்லாமல் இருப்பது அவசியம்.

உதாரணமாக உங்கள் கார் நன்றாக ஓடக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். காரில் பெற்றோல் நிரம்பியிருப்பது அவசியம். ரயர் மற்றும் பற்றரிகளைச் சரிசெய்யுங்கள்.

உணவுப் பொருள், தண்ணீர், மருந்துகள் எந்தத் தட்டுப்பாடும் இல்லாமல் கிடைக்க வழிவகை செய்துகொள்ளுங்கள்.

மேற்கண்டவாறு அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. (ம)

## அணு ஆயுதப் பிரச்சினை பற்றி விவாதிக்க

# தென்கொரிய விசேட தூதர் வடகொரியா பயணமானார்

சியோல்,ஜன.29

பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள வடகொரியாவின் அணுவாயுதப் பிரச்சினைக்கு இராஜீய ரீதியில் தீர்வுகாணும் முயற்சியாக தென்கொரியா தனது விசேட தூதர் ஒருவர் தலைமையிலான குழுவை வடகொரியாவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

தென்கொரிய விசேட தூதர் லிம் டோங்வூன் வடகொரியா சென்று சேர்ந்துள்ளார். விமான நிலையத்தில் அவருக்கு விசேட வரவேற்பு அளிக்கப்பட்டது.

வடகொரிய பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கும் முகமாக தென்கொரியத் தலைநகர் சியோலில் அண்மையில் இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலைத் தொடர்ந்தே தூதர் லிம்மின் வடகொரியப் பயணம் ஆரம்பமாகியுள்ளது.

லிம்முடன் சென்ற குழுவில் மேலும் 9 தென்கொரிய உயர் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். இந்தக் குழுவினர் வடகொரியத் தலைவர் கிம் ஜோங் இல்லையும் மற்ற உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசுவர். வெளியுறவு துணை அமைச்சர் காங் சோக் ஜூவையும் லிம் சந்தித்துப் பேசுவார்.

வடகொரிய விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையின் முன் கொண்டுசெல்லப்போவதாக அமெரிக்கா கூறியுள்ள வேளையில் பொறுமை காக்குமாறு அமெரிக்காவை தென்கொரியா கேட்டுள்ளது. இராஜீய நடவடிக்கை மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்றும் அந்த முயற்சிகள் வெற்றியளிக்க சிலகாலம் ஆகும் என்றும் தென்கொரியா கூறி வருகிறது.

பேச்சுக்கள் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று தென்கொரிய புதிய அதிபர் ரோஹ் கூறியுள்ளார். இது தொடர்பாக வடகொரியத் தலைவரை சந்தித்துப் பேசவும் அவர் எண்ணியுள்ளார்.

இதேவேளை, அணுவாயுதப் பிரச்சினை வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள பிரச்சினை. இதில் ஐ.நாவோ, மற்ற நாடுகளோ தலையிடவேண்டிய அவசியம் இல்லை என்று வடகொரியா கூறியுள்ளது. மூன்றாம் தரப்பினர் இதில் தலையிடுவதற்கு காரணமோ நியாயமோ இல்லை என்றும் வட கொரியா குறிப்பிட்டுள்ளது. இந்த விவகாரத்தில அனைத்துலக அணுசக்தி நிறுவனம் பங்காற்ற முடியும் என்று அதன் தலைவர் எல்பரோடி கனவு காண்பதாக வடகொரியாவின் ஆளும் கட்சிப் பத்திரிகை கூறியது. (ம)



இந்தியாவின் வர்த்தகத் தலைநகரான மும்பாயில் திங்களன்று உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்ததில் 27 பேர் காயமடைந்தனர். வீதியோர சந்தை ஒன்றில் சனக்கூட்டம் அதிகம் இருந்த நேரத்தில் இந்தக்குண்டு வெடித்ததால் அதிக எண்ணிக்கையானோர் காயமடைய நேரிட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். சம்பவம் நடைபெற்ற இடத்தில் தேடுதல் நடத்தும் பொலீஸாரைப் படத்தில் காணலாம்.

# வோஷிங்மெஷினுள் வீழ்ந்து 2 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

தாய்வானில் 2 வயதுச் சிறுவன் ஒருவன் வோஷிங்மெஷின் மீது ஏறி எட்டிப்பார்த்தபோது, அதன் உள்ளே தலைகீழாக வீழ்ந்து தண்ணீரில் மூழ்கி இறந்துள்ளான்.

வோஷிங்மெஷினுக்குள் போட்டிருந்த துணிகளை அவனது தாயார் எடுக்க கைவிட்டபோதே அவன் பிணமாகக் கிடப்பது தெரியவந்தது.

இந்தப் பரிதாபச் சம்பவம் மேற்கு தாய்வானில் மியாலி கவுண்டியில் இடம்பெற்றுள்ளது.

குழந்தையைப் பறிகொடுத்த துக்கத்தில் அவனது தாயார் அந்த வோஷிங்மெஷினையே தூக்கி எறிந்து விட்டார். (ம)

# இந்தோனேஷியாவில் இருந்து அரிய விலங்கினங்கள் கடத்தல்

ஆயிரக்கணக்கான அரிய விலங்குகள் ஒவ்வொரு மாதமும் இந்தோனேஷியாவிலிருந்து கடத்தப்படுவதாக இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடத்தப்படும் வன விலங்குகளில் புலி, கரடி, குரங்கு, பறவைகள், பாம்பு ஆகியனவும் அடங்கும். சட்டபூர்வமாக ஏற்றுமதி செய்யப்படும் விலங்குகளுக்கு சமமான எண்ணிக்கையில் இத்தகைய அரிய விலங்குகளும் கடத்தப்படுவதாக இந்தோனேஷிய அதிகாரி ஒருவர் கூறினார்.

ஜகார்த்தாவில் முக்கிய இரு சந்தைகளில் விலங்குகள் விற்கப்படுகின்றன. இவற்றை வாங்கிச் செல்வதற்கு ஜப்பான், குவைத், பாகிஸ்தான், மலேசியா, ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து மக்கள் வருவதாக அந்த அதிகாரி சொன்னார்.

அரிய விலங்குகளை விற்பதற்கு இங்கு தடை விதிக்கப்பட்டுள்ளபோதிலும் இந்த விதிமுறைகளை மீறி சில வியாபாரிகள் அவற்றை விற்றுவருவதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

அவ்விரு சந்தைகளிலும் பொலீஸா அவ்வப்போது சோதனை மேற்கொண்டு வரும்போதிலும் வியாபாரிகள் யாரும் பிடிபடுவதில்லை என்றும, அதற்குக் காரணம் அத்தகைய விலங்குகளை அவர்கள் தங்கள் வீடுகளில் மறைத்து வைத்து விடுகின்றனர் என்றும் அந்த அதிகாரி கூறினார். (ம)

# வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு

## வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்ற மாணவ குடும்ப நல உத்தியோகத்தர்(மருத்துவ மாதர்)களைப் பயிற்றுவிப்பதற்கான ஆள்சேர்ப்பு - 2003

01. வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் குடும்ப நல உத்தியோகத்தர்களை(மருத்துவ மாதர்களை) பயிற்றுவிப்பதற்கு ஆள் சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடமாக உள்ள விவாகமாகாத இலங்கைப் பெண் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன. தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் வட கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக்குழு ஒன்றின் மூலம் திறமை அடிப்படை ஒழுங்கில் தெரிவுசெய்யப் படுவார்கள்.

02. நேர்முகப் பரீட்சை சிங்கள/தமிழ்மொழிமூலம் மாத்திரம் நடத்தப்படும்.

03. **i. கல்வித் தகைமைகள்**

அ. தமிழ்மொழி அல்லது இலக்கியம் ஆகிய ஒன்றில் திறமைச் சித்தியும், தூய கணிதத்தில் திறமைச்சித்தியும், பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், தாவரவியல் அல்லது விலங்கியல், விஞ்ஞானம் ஆகிய பாடங் களுள் இரண்டு பாடங்களுக்கு திறமைச்சித்தியுடன் ஒரு தடவைக்கு 5 பாடங்களுக்குக் குறையாதவாறு இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் 6 பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

அல்லது

ஆ. முதன்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு "B" தரத் துக்குக் குறையாத சித்தியும், சுகாதாரப் பாடத்திற்கு அல்லது தொழில் நுட்பப் பாடம் ஒன்றுக்கு "B" தரத்திற்குக் குறையாத சித்தியும் ஒரு தடவையில் 5 பாடங்களுக்குக் குறையாதவாறு இரு தடவைகளுக்கு மேற் படாத தடவைகளில் குறைந்த பட்சம் 6 பாடங்களில் தே.பொ.க. பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

அல்லது

இ. தமிழ்மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங் களுடன் இன்னுமொரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவை யில் 5 பாடங்களுக்குக் குறையாதவாறு இரண்டு தடவைகளுக்கு மேற் படாத தடவைகளில் குறைந்தபட்சம் ஆறு பாடங்களில் க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**ii. வேறு தகைமைகள்/ஏனைய தகைமைகள்:**

அ. 2003.02.05ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 40 வயதுக்கு அதிகப்படாமலும் இருத்தல்.

ஆ. உயரம் 4 அடி 10 அங்குலத்திற்குக் குறையாது இருத்தல்.

இ. விவாகமாகாதவராய் இருத்தல்.

ஈ. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எப்பிரதேசத்திலும் கடமையாற்றக் கூடியவாறு சரீர சுகமுடையவராய் இருத்தல்.

உ. சகல விண்ணப்பதாரிகளும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பரி பாலன எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது கடைசியாக 03 வருடங்கள் தொடர்ச்சியாக வடகிழக்கு மாகாணத்தில் வசித்ததனை உறுதிப்படுத்தத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. **விண்ணப்பிக்கவேண்டிய முறை:**

i. விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின்படி செ.மீ. 21X29 அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்க வேண்டும்.

ii. விண்ணப்பங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்படவேண்டும். அதன் மூலப் பிரதியை 2003.02.05ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் *"செயலாளர், சுகாதார அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம், நீதிமன்ற வீதி, திருகோணமலை"* என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். விண்ணபத்தின் இரண்டாவது பிரதியை *"பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்"* என்ற விலாசத்திற்கு மேற்குறிப்பிட்ட கால எல்லைக்குள் அனுப்பிவைக்கவேண்டும்.

iii. விண்ணப்பங்களை இடும் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "மாணவ குடும்ப நல உத்தியோகத்தர்களின் பயிற்றுவிப்பதற்கான ஆள்சேர்ப்பு - 2003" எனக் குறிப்பிடப்படவேண்டும்.

iv. விண்ணப்பத்துடன் பதிவுத் தபாலில் அனுப்புவதற்காக தங்கள் முகவரி எழுதப் பட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீளமான கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

v. உரிய முறையில் பூரணப்படுத்தப்படாததும், காலந்தாழ்த்திய விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன், தபாலில் காணாமற்போன, தபால் சேவையில் காலதாமதம் போன்ற முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

vi. விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்க பாடசாலை அதிபரினால் அல்லது சமாதான நீதிவானால் அல்லது சட்டத்தரணியால் அல்லது ரூபா 74, 160/-இற்குக் குறையாத வருடாந்த வேதனம் பெறும் அரசாங்க உத்தியோகத்தரால் அத் தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

vii. விண்ணப்பம் கிடைக்கப்பெற்றது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது.

05. **பயிற்சித் திட்டம்:**

i. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் மாணவ குடும்ப சுகாதார சேவை உத்தி யோகத்தர்களாகப் பயிற்சிக் கல்லூரிக்குச் சேர்க்கப்பட்டு சிங்கள/தமிழ்மொழி மூலம் பயிற்றுவிக்கப்படுவார்கள்.

ii. பயிற்றப்படும் காலத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சையில் தேர்ச்சியடையாத அல்லது செயலொழுக்கம் என்பவற்றினால் திருப்தியற்ற முறையில் அல்லது தான் பயிற்சிபெறும் பாடசாலையில் பரீட்சைகள் விடுமுறை நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்குத் தவறிய பயிற்சியாளர்களின் பயிற்சி எவ்வேளையிலும் நட்டஈடு எதுவும் கொடுக்கப் படாமல் நிறுத்தப்படும்.

iii. பயிற்சிக்கு உட்படுத்தப்படும் வேளையில் பயிற்சியாளர்களுக்குக் கல்லூரிகளில் அமுலாக்கப்படும் சட்டதிட்டங்கள் கோவை ஒன்று வழங்கப்படும். இச்சட்டதிட்டங் களுக்கும் காலத்திற்குக் காலம் பிறப்பிக்கப்படும் வேறு சட்டதிட்டங்களுக்கும் இவர்கள் அமைவாக நடக்கவேண்டும்.

06. **விவாகமாகாதவர்க்குரிய நிபந்தனையும், உடன்படிக்கையும்:**

i. சகல பரீட்சார்த்திகளும் விண்ணப்பிக்கும் திகதியில் விவாகமாகாதவராக இருத் தல் வேண்டும் என்பதுடன் பயிற்சியைப் பூரணப்படுத்தும் வரையிலும் விவாகமாகா தவராக இருத்தல் வேண்டும்.

ii. மாணவ குடும்பநல உத்தியோகத்தர்கள் பயிற்சிக் கல்லூரிக்குச் சேர்க்கப்படும் பொழுது பயிற்சியினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்திக்கொண்டதன் பின்பு, வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் ஆகக்குறைந்தது 10 வருடங் கள் சேவையாற்ற சம்மதம் தெரிவித்து, வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு செயலாளர் அவர்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ளல்வேண்டும்.

07. **சேவைக்கான நிபந்தனைகள்:**

i. சகல பயிலுநர்களும் பயிற்சியின் ஆரம்பத்தில் மருத்துவ சோதனைக்கு சமுகங் கொடுக்கவேண்டும்.

ii. தாபனக் கோவையின் (11)ஆம் அத்தியாயத்தின் 10முதல் 12 வரையிலும் உள்ள பிரிவுகள் ஏற்புடையனவாகும்.

iii. சகல குடும்பநல உத்தியோகத்தர்களும் சாதாரண நியதிகளுக்கும், ஸ்ரீலங்கா சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நியமிக்கப்படும் கொள்கைகளும் அமைவாக நடத்தப்படும் இடமாற்றங்களும், நிதி நிபந்தனைகளுக்கும் வேறு நிபந்தனைகளுக்கும் காலத்திற்குக்காலம் அம்மாகாண சபையால் பிறப்பிக் கப்படும் கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டவர்களாக இருத்தல்வேண்டும்.

**(ஆர்.எம்.எஸ்.ரத்நாயக்க),**
**செயலாளர்,**
**சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,**
**வடக்கு - கிழக்கு மாகாணம்.**
**10.01.2003.**

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடக்கு - கிழக்கு மாகாண சபையில் சுகாதார சேவைத் திணைக்களத்தில் மாணவ குடும்ப நல உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கான ஆள்சேர்ப்பு - 2003**

01. அ. முதலெழுத்துக்களுடன் பெயர்(ஆங்கிலத்தில்):
ஆ. முழுப்பெயர்(சிங்களத்தில், தமிழில் அல்லது ஆங்கிலத்தில்):
02. (i) அஞ்சல் விலாசம்(ஆங்கிலத்தில்):
03. அ. நிரந்தர விலாசம்:
ஆ. மாவட்டம்:
04. பிறந்த திகதி ............ மாதம் ............ திகதி ............
05 விவாகமானவர்/விவாகமாகாதவர்:
06. உயரம் ............ அடி ............ அங்குலம் ............(செ.மீ.)
07. இலங்கைப் பிரஜையா? ஆம்/இல்லை:
08. இனம்

| | | | |
|---|---|---|---|
| சிங்களம் | 1 | தமிழ் | 2 |
| முஸ்லிம் | 3 | பறங்கியர் | 4 |
| மலேயர் | 5 | மற்றையவர்கள் | 6 |

09. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
10. அ. சிரேஷ்ட பாடசாலை பரீட்சை/க.பொ.த.(சா/த)/தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை:
★ பரீட்சை நடந்த வருடமும் மாதமும்:
★ சுட்டெண்:

1. முதல் அமர்வு

| பாடங்கள் | பெறுபேறுகள் | பாடங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|---|
| i | | v | |
| ii | | vi | |
| iii | | vii | |
| iv | | viii | |

2. இரண்டாம் அமர்வு

| பாடங்கள் | பெறுபேறுகள் | பாடங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|---|
| i | | v | |
| ii | | vi | |
| iii | | vii | |
| iv | | viii | |

11. நீர் சட்டத்தின் மூலம் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டவரா? ஆம்/இல்லை: ஆம் எனில் விவரங்கள் தருக.
12. விண்ணப்பதாரரின் அத்தாட்சி
அ. என்னால் இங்கு தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் யாவும் உண்மை எனவும், வடக்கு - கிழக்கு மாகாணத் தில் நிரந்தரமாக வசித்தவரெனவும் உறுதிப்படுத்திக்கொள்ளுகின்றேன்.
ஆ. என்னால் தரப்பட்ட விவரங்களில் பிழைகள் அல்லது தவறுகள் இருப்பின் தெரிவுசெய்வதற்கு தகுதியற்றவராகக் காணப்படுவேன். அல்லது தெரிவின் பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

திகதி ......................  ............................
விண்ணப்பதாரியின் ஒப்பம்

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்
இவ்விண்ணப்பதாரி ........................ எனக்குத் தனிப்பட்ட முறை யில் தெரிந்தவர் எனவும் .......... ஆம் திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.
திகதி ......................  ............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப் பெயர்: ......................
பதவி : ..................
முகவரி : ..................
திகதி : ..................
இறப்பர் இலச்சினை

(C/26265)

## 29ஆவது தேசிய விளையாட்டு விழாவில் கலந்துகொள்ள

# சுசந்திகா உட்பட 4,000 வீரர்கள் யாழ். குடாநாட்டுக்கு வருவார்கள்

## துரையப்பா மைதானத்தில் பிரதான தடகளப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள 29ஆவது தேசிய விளையாட்டு விழாவில் இலங்கை தேசிய அணியின் நட்சத்திர மெய்வல்லுநர் சுசந்திகா ஜெயசிங்க உட்பட 4 ஆயிரம் வீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இந்தத் தேசிய விளையாட்டு விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதிமுதல் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற சுசந்திகா ஜெயசிங்க மற்றும் ஆசிய சாதனையாளர்களான தமயந்தி தர்ஷா, சுகத் திலகரத்னா, ஸ்ரீயாணி குலவன்ஸ ஆகியோரும் இப்போட்டியில் பங்குபற்றுகின்றனர் என்று யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எஸ்.ரூபசிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள தெற்காசிய விளையாட்டு விழாவுக்காக தேசிய மெய்வல்லுநர் குழாமிலுள்ள 77 பேரும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன் பின் வருட இறுதியில் பிலிப்பைன்ஸில் நடைபெறவுள்ள ஆசிய மெய்வன்மைச் சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கை அணி வீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.




இப்போட்டிக்கு முன் இலங்கை போட்டியாளர்கள் பங்குபற்றும் முக்கிய போட்டியாக 29ஆவது தேசிய விளையாட்டு விழா அமையவுள்ளது.

தேசிய விளையாட்டு விழா மற்றும் தேசிய மெய்வன்மைப் போட்டிகள் என்பன ஆசிய மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை வீரர்களுக்கான தகுதிகாண் போட்டிகளாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டுப் போட்டிகளில் முக்கியமான தடகளப் போட்டிகள் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளன. இதற்காக துரையப்பா மைதானம் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

ஏனைய போட்டிகள் இடம்பெறும் மைதானங்களின் விவரங்கள் வருமாறு:-

★ கூடைப்பந்தாட்டம் - சென். ஜோன்ஸ் கல்லூரி.

★ வலைப்பந்தாட்டம், குத்துச்சண்டை மற்றும கபடி என்பன - யாழ் மத்திய கல்லூரி.

★ ஜுடோ - வை.எம்.சி.ஏ.

★ எல்லே, மல்யுத்தம், மேசைப் பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

★ பளு தூக்கல் - திருக்குடும்ப கன்னியர்மடம்.

★ கராத்தே - நல்லூர் இளங் கலைஞர் மன்றம்.

இதேவேளை -

நீச்சல், பட்மின்ரன், ஹொக்கி மற்றும் ஜிம்னாஸ்ரிக் போட்டிகளை யாழ். மாவட்டத்தில் நடத்துவதற்கு வசதியான மைதானங்கள் இல்லாமையால் அவற்றை கொழும்பில் நடத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-5)



உலகக் கிண்ண கிரிக்கெட்



## உலகக் கிண்ணக் கிரிக்கெட் இன்னும் பத்து நாள்களில்

### 47 வயதிலும் போட்டியில் பங்குபற்றிய வீரர்

கொழும்பு,ஜன.29

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இன்னும் 10 நாள்களில் ஆரம்பமாக உள்ளன. இந்நிலையில் 47வயதிலும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடமுடியும் என நிருபித்துள்ளார் நெதர்லாந்தின் கிளார்க்.

இவர் உலகக் கிண்ணப் போட்டியில் மிகவும் மூத்த வீரராக களமிறங்கி சாதனை படைத்துள்ளார். அப்படியானால் மிகவும் இளம் வயதில் உலகக் கிண்ண போட்டியில் விளையாடியவர் யார் என தேடிப்பார்த்தால் இலங்கையின் பாஸ்கால் திகழ்கிறார். இவர் 17வயதில் பங்கேற்று சாதித்துக்காட்டியுள்ளார்.

இப்பட்டியலில் 4ஆவது இடம் பிடிக்கும் சச்சின் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் மிகவும் இளம் வயதில் இடம்பெற்ற இந்திய வீரர் என்ற பெருமையை பெறுகிறார்.

நடந்து முடிந்த 7 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் இடம்பெற்ற இளம் மற்றும் மூத்த வீரர்களின் விவரம் வருமாறு:-

| வீரர் | வயது |
|---|---|
| **இளம் வீரர்கள்** | |
| 1. பாஸ்கல் (இலங்கை) | 17வரு. 237 நாள்கள் |
| 2. டி.ஒடயா (கென்யா) | 17வரு. 282 நாள்கள் |
| 3. மியான்டட் (பாக்.) | 17 வரு. 364 நாள்கள் |
| 4. சச்சின் (இந்தியா) | 18வரு. 304 நாள்கள் |
| 5. சியூடிரன் (நெதர்.) | 18வரு. 351 நாள்கள் |
| **மூத்தவர்கள்** | |
| 1. கிளார்க் (நெதர்லாந்து) | 47வரு. 256 நாள்கள் |
| 2. டைகாஸ் (ஸிம்பாவே) | 44வரு. 306 நாள்கள் |
| 3. அப்போன்சோ (நெதர்.) | 43வரு. 128 நாள்கள் |
| 4. பிரிங்ளே (கிழக்கு ஆபி.) | 43வரு. 45 நாள்கள் |
| 5. லப்பார்ஸ் (நெதர்லாந்து) | 42வரு. 346 நாள்கள் |

## ஜடேஜா மீதான தடை நீதிமன்றால் நீக்கம்!



புதுடில்லி,ஜன.29

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அஜய் ஜடேஜாவுக்கு விதிக்கப்பட்டிருந்த ஐந்து வருட காலத் தடையை புதுடில்லி மேல் நீதிமன்றம் நீக்கியது.

இந்நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர் ஜே.கே.மெஹ்ரா கடந்த ஞாயிற்றுக்கிழமை இத்தீர்ப்பை வெளியிட்டார்.

ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டார் என்று ஜடேஜாவின் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. சி.பி.ஐ. விசாரணையின் பின் 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஜடேஜாவுக்கு 5 வருட காலத் தடை விதிக்கப்பட்டது.

தன் மீதான தடையை நீக்கவேண்டுமென்றும் தாம் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டதாக சி.பி.ஐ. விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதைச் செல்லுபடியற்றதாக்கவேண்டும் எனவும் கோரி ஜடேஜா 2001.02.08 இல் புதுடில்லி மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

பல தடவைகள் விசாரணைகள் நடைபெற்றபின் கடந்த நவம்பர் முதலாம் திகதி இவ்விடயத்தை மத்தியஸ்தர் ஒருவர்மூலம் தீர்த்துக்கொள்வதற்கு ஜடேஜா இணங்கினார். இந்திய கிரிக்கெட் சபையும் இதற்கு உடன்பட்டது. அதையடுத்து முன்னாள் நீதிபதியான ஜே.கே.மெஹ்ராவை மத்தியஸ்தராக நீதிபதி நியமித்தார். அவர் திங்களன்று தனது தீர்ப்பை அறிவித்தார்.

"ஜடேஜா மீதான தடையை நீதிமன்றம் நீக்கியுள்ளது. இந்திய கிரிக்கெட் சபை நடத்திய உள்ளக விசாரணை சட்டபூர்வமற்றதும் ஒரு பக்க சார்பானதுமெனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஜடேஜா இனி நாட்டுக்காக விளையாடுவதற்குத் தகுதியானவர்."

- இவ்வாறு ஜடேஜாவின் சட்டத்தரணி வின்சன்ட் மல் ஹோட்டா தெரிவித்துள்ளார்.

31 வயதான ஜடேஜா, இந்தியாவுக்காக 15 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் பங்குபற்றி, 576 ஓட்டங்களைப் பெற்றுள்ளார் (சராசரி 26.18). எனினும் 196 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றி 5359 ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஒருநாள் போட்டிகளில் சராசரியாக 37.47 ஓட்டங்களை அவர் பெற்றுள்ளார்.

இதேவேளை - தீர்ப்பின் முழு விவரத்தையும் அறிந்த பின்னரே கருத்துத் தெரிவிக்கமுடியும் என இந்திய கிரிக்கெட் சபை அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-5)

## சாதனைப்பட்டியலில் ஹைடன் முதலிடத்தில்

டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான துடுப்பாட்டத் தரவரிசையில் ஆஸி. வீரர் மத்தியூ ஹைடன் முதலிடம் பெற்றுள்ளார்.

ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான பிறைஸ்வோட்டா ஹவுஸ்கூப்பர் நிறுவனத்தின் புதிய தரப்படுத்தல் பட்டியல், கடந்த ஞாயிறன்று வெளியிடப்பட்டது.

இப்போட்டியில் ஹைடன் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இதுவரை சனத் ஜெயசூரியாவே முதலிடத்தில் இருந்து வந்தார்.

வி.பி. கிண்ணக் கிரிக்கெட் தொடரில் 458 ஓட்டங்களைப் பெற்றார் ஹைடன். அவர் தரவரிசையில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். டெஸ்ட் தரப்படுத்தலில் ஏற்கனவே அவர் முதலிடத்தில் உள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளின் பிறையன லாரா, விவியன் ரிச்சர்ட்ஸ், இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் ஆகியோரே இதற்கு முன் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஒரே சமயத்தில் முதலிடத்தைப் பெற்ற வீரர்களாவர்.



இதேவேளை - ஒரு நாள் போட்டிகளுக்கான பந்து வீச்சாளர் தரப்படுத்தலில் தென்னாபிரிக்க வீரர் ஷேன் பொலொக் முதலிடத்தை பெற்றுள்ளார்.

இலங்கை வீரர் முத்தையா முரளீதரன் இரண்டாமிடத்தில் உள்ளார். (ம-5)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் யாழ்துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

★ பிற்பகல் 4.00 மணி - ஜெட்லைன் வி.க. எதிர் கலைவாணி வி.க.

★ பிற்பகல் 5.00 மணி குருநகர் வி.க. எதிர் கொட்டடி கே.ஸி.ஸி. வி.க. (ம-5)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.29

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வதிரி டொமேர்ஸ் வி.கழகமும், கரணவாய் மத்திய வி.கழகமும் மோதுகின்றன. (ம-5)

# விளையாட்டு

## உலகக்கிண்ணப் போட்டிகளில் மைக்கல் பெவன் ஆடுவார்



சிட்னி,ஜன.29

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற வி.பி. கிண்ண இறுதியாட்டத்தில் காயமுற்ற ஆஸ்திரேலிய வீரர் மைக்கல் பெவன் உலகக் கிண்ணக் கிரிக்கெட போட்டியில் விளையாடுவார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தின்போது காயமடைந்த இவர் ஸ்ரெச்சரில் தூக்கிச் செல்லப்பட்டார். இதனால், அவருக்கு ஏற்பட்ட காயம் பெரியதாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இக்காயம் காரணமாக எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகும் உலகக் கிண்ணப் போட்டிகளின் ஆரம்ப ஆட்டங்கள் இரண்டில் இவர் பங்குபற்றமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இவருக்கேற்பட்ட காயம் எதிர்பார்த்தளவு மோசமாக இல்லை எனவும் ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்ரிங்குடன் ஆலோசனை செய்த பின்பு பெவனை தொடர்ந்தும் அணியில் வைத்திருப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் தேர்வுக்குழுத் தலைவர் ரிரெவர் ஹான்ஸ் தெரிவித்துள்ளார். (ம-55)

## மே.இந்திய வீரர் சாமுவேல்ஸ் உலகக்கிண்ண அணியில் இல்லை

செயின்ட் கான்ஸ்,ஜன.29

மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னணித்துடுப்பாட்ட வீரரான மார்லன் சாமுவேல்ஸ் முழங்காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக உலகக் கிண்ண அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணித் தெரிவுக்குழுத் தலைவர் விவியன் ரிச்சர்ட்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

சாமுவேல்ஸுக்கு பதிலாக சகல துறை ஆட்டக்காரரான ரியான் ஹெரன்ட்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அண்மையில் மேற்கிந்திய தீவுகள் அணியின் இந்தியச்சுற்றுப் பயணத்தின் போது விஜயவாடாவில் நடைபெற்ற கடைசிப்போட்டியில் சாமுவேல்ஸ் 75 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அழகான Miniature Dachund நாய்க்குட்டிகளும், அழகான Great Dane - Dobermann Pincher பெண் நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரா வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(13782)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் மேற்கு, கட்டுடையில் இல.77, 81/2 பரப்பு (சுற்று மதிலுடன கூடியது) காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.சுகுணராஜா, கரந்தன், நீர்வேலி. (13807)

## இறைச்சிக்கோழி

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை).19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(13350)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 30-01-2003, 06-02-2003 திகதிகளில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரா வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13783)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 43 வயது, சதயம், 8இல் செவ்வாய் (பாவம் குறைவு), சொந்தமாக நிறுவனம் நடத்தும், விவாகரத்துப் பெற்றவருக்குத் தகுந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். சாதகக் குறிப்பு உட்பட சகல விவரங்களையும் அனுப்பவேண்டிய முகவரி: விளம்பர இல.1759, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (13784)

## மணமகன் தேவை

யாழ்.கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் கொம்பியூட்டர் எஞ்சினியரிங் செய்பவர், 1974இல் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்த மணமகளிற்கு கனடா, U.K. அல்லது ஆஸ்திரேலியாவில் தகுந்த மணமகன் தேவை. தொடர்பு T.P. 226 3034, 070 - 212980 (13759)

## தவறிவிட்டது

குடத்தனையைச் சேர்ந்த குகதாஸ் முகுந்தனின் தே.அ.அ.(791663407V), வி.அ.அ.(091102556), தபாற் சேவகர் அ.அ. என்பன வல்லைக்கும் புத்தூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் குகதாஸ் முகுந்தன், குடத்தனை என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (13789)

இரத்தினவேலு கலாவதி என்பவருடைய தே. அ. அ.(696682488V), வி.அ.அ.(091015277) என்பன சுதுமலை அம்மன் கோவிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய், பிறேம் நகைமாடத்தில் ஒப்படைத்துதவவும். (13815)

## இந்திய மீனவரால் வலைகள் சேதம்

வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான ஊடுருவல்களினால் வடமராட்சி மீனவர்கள் அடிக்கடி பெரும் இழப்புக்களை சந்தித்து வருகின்றனர்.

இப்பிரதேசத்துக்குள் நுழைந்து மீன்பிடித்தொழிலை மேற்கொண்டுள்ள இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் (ரோலர்கள்) வடமராட்சி மீனவர்களின் வலைகளை அறுத்து சேதப்படுத்தி வருகின்றன. கடந்த சில தினங்களில் மட்டும் பல லட்சக்கணக்கான வலைகள் இவ்வாறு அறுக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். (ம-173)


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

காலம்: 01.02.2003 காலை 10 மணி.

அநேக மாணவரின் வேண்டுகோளுக்கிணங்க, அனைத்து Diploma கற்கை நெறிக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

இயக்குநர்
IIS
யாழ்ப்பாணம்.
(C/26247)



# இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார் பரம்பரை ஜோதிடர்



புகழ்பெற்ற
**S.N.குமாரசாமி**
அவர்கள்

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, தொழில் முன்னேற்றமின்மை மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும் (காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை).

திரு.S.N.குமாரசாமி
ஸ்ரான்லி லொட்ஜ்,
No: 711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்).
(13811)


# பேருவகை அடைகின்றோம்



இணுவில் மேற்கு J/191 கிராம உத்தியோகத்தர்

**திரு.க.இரவீந்திரன்**
அவர்கள்

கிராம உத்தியோகத்தர் தரம் I இற்குப் பதவியுயர்வு அடைந்ததையிட்டு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து நாம் பேருவகை அடைவதோடு, அவர் மேலும் பல பதவிகளையும், சிறப்புக்களையும் பெற்று இணுவில் மக்களுக்கும், விவசாயிகளுக்கும் தொடர்ந்து சேவையாற்ற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
(13812)
விவசாயிகள் சம்மேளனமும்,
விவசாயிகளும்.

# 15ஆவது ஆண்டு நீங்காத நினைவலைகள்

மண்ணுலகில்
19 - 02 - 1970



விண்ணுலகில்
29 - 01 - 1988

## செல்வி துரைஐயா சிவறமணி (றமணி)

ஆண்டுகள் பதினைந்து போனதம்மா உனைப்பிரிந்து றமணியே!
ஆறாது எம் நெஞ்சம் உன் நினைவினாலே
நீங்காத நினைவுகள் தொடர்கதைகளாக
நெஞ்சை வருத்தும் நிதம் நிழலாடும் உன்னுருவம்
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*


தற்காலிக முகவரி:
*G.P.S. றோட்,*
*கல்வியங்காடு.*
நிரந்தர முகவரி:
*கைதடி நுணாவில்,*
*சாவகச்சேரி.*

உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, அண்ணா,
அண்ணி, சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

(13814)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27 - 12 - 1939



மறைவு
09 - 02 - 2002

## அமரர் சண்முகம்பிள்ளை கதிர்காமன்

(உரிமையாளர், இரும்புத் தொழிற்சாலை)

திதி: 29.01.2003

*மண்ணை விட்டுச் சென்ற*
*மாண்பு மிகு தெய்வமே!*
*மனதில் அணையாத ஜோதியே!*
*ஓராண்டு ஆனதப்பா*
*ஓயவில்லை எம் துயரம்!*
*ஆறவில்லை எம்காயம் அப்பாவே!*

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*98, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(13806)
மனைவி,
மகன்: சுரேஸ்குமார்.

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
06 - 05 - 1908



இறை மகிமைக்குள்
29 - 01 - 2000

## திருமதி மேரி அமிர்தம்மா (B) பக்கஸ்
**(மேரி அக்கா).**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை)

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"

அன்புடன் நினைவுகூரும்:
தியாகராஜா சரஸ்வதி,
குமரேசு கமலாதேவி,
கந்தையா நாகம்மா.
*(பேறாமக்கள்)*

*வெஸ்லி லேன்,*
*கல்லூரி வீதி,*
*பருத்தித்துறை.*
(13797)


15 ஆவது ஆண்டு நிறைவையொட்டி

# காவேரி சில்க்ஸின்

## மாபெரும் மலிவு விற்பனை

மேலும் மேலும் பல... பல...

புதியரகங்களில்
பற்பல விலைகளில்

**அதிரடி விலை குறைப்பு**

பஞ்சாபி கிட்
சோளி கிட்
பட்டுச் சாறிகள்
மற்றும்
பல்வகை சாறிகள்
BOX சேட்
செக் மெற்றீரியல்
சேட் மெற்றீரியல்
பிறின்டட் சீத்தை

இன்னும் பற்பல ஆடை வகைகள்
அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

# காவேரி சில்க்ஸின்
## மலிவு விற்பனை அகம்

77, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(C/26234)